# போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

**IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்**

**SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,**

DECEMBER 18, 1923.

நெ. 11 (2).] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் வருஷம் டிஸெம்பர் மீ 18வ. [விலை, 2 அ. 3 பை.


## சென்னை கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்

## BILL OF THE GOVERNMENT OF MADRAS

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

---

சென்னை சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகின்றன:—

### BILL No. 5 OF 1923.

### 1923-ம் வருஷத்து 5-வது மசோதா ஆக்ட்.

---

### THE TUTICORIN PORT TRUST BILL, 1923.

### 1923-ம் வருஷத்து தூத்துக்குடி ரேவு ட்ரஸ்ட் மசோதா ஆக்ட்.

---

தூத்துக்குடி ரேவை ஒழுங்குபடுத்துவதற்காகவும் சீராய் வைத்திருப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்கு கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:—

### 1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

*சுருக்கமான பெயர்.*

1. இந்த ஆக்டை, 192 -ம் வருஷத்திய தூத்துக்குடி ரேவு ட்ரஸ்ட் ஆக்டென்று சொல்லலாம்.

*வழங்கத்தொடங்குவது.*

2. பிரதேச கவர்ன்மென்டார் விளம்பரமூலமாய்க் கட்டளையிடக்கூடிய தேதி அல்லது தேதிகளில் இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

*அர்த்தம் கூறும் பகுதி.*

3. இந்த ஆக்டிலே சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்,—

*"போர்டார்."*

(1) "போர்டார்" என்பது - இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்ட தூத்துக்குடி ரேவு ட்ரஸ்டிகளென்று அர்த்தமாகும்;

"கஸ்டம் தீர்வை பிரதான உத்தியோகஸ்தர்."

(2) "கஸ்டம் தீர்வை பிரதான உத்தியோகஸ்தர்" என்பது - அந்தந்த காலத்தில் தூத்துக்குடி ரேவுக்காக ஏற்பட்டிருக்கும் கஸ்டம் தீர்வை பிரதான நிர்வாக உத்தியோகஸ்தரென்று அர்த்தமாகும் ;

"டாக்."

(3) "டாக்" என்பதிலே, மரக்கலங்களை நிறுத்துவதற்கான பேஸின்கள் - லாக்குகள் - வெட்டிவிட்டிருக்கிற வழிகள் - நுழைவாயில்கள் - மரக்கலங்களின் அடிப்புறங்களைப் பரிசோதனைசெய்து சுத்திபண்ணுவது முதலியவற்றிற்கான க்ரேவிங் டாக்குகள் என்னும் இடங்கள் - க்ரேவிங் ப்ளாக்குகள் - இன்க்ளைண்ட் (சாய்ந்து தட்டையாயுள்ள) ப்ளேன்கள் - ஸ்லிப்வேக்கள் - செப்பனிடுவது முதலியவற்றிற்காக மரக்கலங்களை மேலுக்கெழுப்புவதற்கான க்ரிட் அயரன்கள் - மேட்டு வழிகள் - வார்ப் என்னும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரைகள்-சாமான் கிடங்குகள் - யாதொரு டாக்குக்குரிய வேறே கட்டுவேலைகள் வஸ்துக்கள் ஆகிய இவைகளும் அடங்கும் ;

"சரக்கு."

(4) "சரக்கு" என்பது ஒவ்வொரு வித அசையும் பொருளென்று அர்த்தமாவதோடுங்கூட, அதில் ஜீவ பொருளும் அடங்கும் ;

"நிலம்."

(5) "நிலம்" என்பதிலே, நீரேற்றக்குறிப்புக்குக் கீழேயுள்ள கடலின் அடித்தரை என்பதும் அடங்கும் ;

"மாஸ்டர்."

(6) "மாஸ்டர்" என்பது - யாதொரு மரக்கல சம்பந்தமாய் உபயோகிக்கப்படும்போது, ஹார்பர் மாஸ்டர் அல்லது (ஆறுகாட்டி கப்பலைச்செலுத்தும்) பைலட் தவிர அந்தந்த காலத்தில் அப்படிப்பட்ட மரக்கலத்தைத் தம் வசத்திலாவது அதிகாரத்திலாவது வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு நபரென்று அர்ததமாகும் ;

"சொந்தக்காரர்."

(7) "சொந்தக்காரர்" என்பதிலே, சரக்கு விஷயமாய் அந்த வார்த்தை உபயோகிக்கப்படும்போது, அப்படிப்பட்ட சரக்கை ஒப்படை செய்கிறவர் - ஒப்படை வாங்குகிறவர் - கப்பலேற்றுகிறவர் அல்லது அதை விற்பதற்காவது பத்திரமாய் வைத்துவைப்பதற்காவது ஏற்றுவதற்காவது இறக்குவதற்காவது ஏஜென்டாயிருப்பவர் என்பதும் அடங்கும் ; யாதொரு மரக்கல விஷயமாய் அந்த வார்த்தை உபயோகிக்கப்படும்போது, அதில் யாதொரு பாகத்திற்குச் சொந்தக்காரராயிருப்பவர் - சபர்போவதற்காக மரக்கலத்தை வாடகைக்கு வாங்கிக்கொள்ளுகிறவர் - ஒப்படைவாங்குகிறவர் - அல்லது அதைத் தம் சுவாதீனத்திலுடைய ஒற்றிக்காரரென்பதும் அடங்கும் ;

"சமுத்திர வாராவதி."

(8) "(பியர்) சமுத்திர வாராவதி" என்பதிலே, நிற்பதற்கான யாதொரு நிலை-படிக்கட்டுகள் - இறங்குகிற இடம் - ஹார்டென்கிற சிறு வாராவதி - ஜெட்டி (அணை) - இறங்குவதற்கான நிலை - மிதவைப்படகு அல்லது பான்டூன் என்கிற மிதவைச்சலங்கு என்பதும், அதைச்சேர்ந்த எவ்வித வாராவதிகள் அல்லது வேறே கட்டுவேலைகளென்பதும் அடங்கும் ;

"ரேவு."

(9) "ரேவு" என்பது-இந்த ஆக்டின் காரியங்களின் பொருட்டு போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரமூலமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய எல்லைகளுக்குள் இருக்கிற தூத்துக்குடி ரேவு என்றும், அப்படி விளம்பரம் பிரசித்தம் செய்யப்படுகிறவரையில் 1908-ம்௵த்திய இந்துதேசத்து ரேவு ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும்படியான எல்லைகளுக்குள் இருக்கிற தூத்துக்குடி ரேவு என்றும் அர்த்தமாகும் ;

1908-ம்௵த்து 15-வது ஆக்ட்.

"போர்ட் ட்ரஸ்ட் பத்திரம்."

(10) "போர்ட் ட்ரஸ்ட் பத்திரம்" என்பது-இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி வாங்கப்பட்ட யாதொரு கடன் விஷயமாய் போர்டாரால் வெளிவிடப்பட்டிருக்கும் டிபென்சர் என்னும் கடன் பத்திரங்கள், பாண்டுகள் அல்லது ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகள் என்று அர்த்தமாகும் ;

"நிர்ணயிக்கப்பட்ட."

(11) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினாலாவது ரெகுலேஷன்களினாலாவது சகாயச் சட்டங்களினாலாவது நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும் ;

"வீத வரி."

(12) "வீத வரி" என்பதிலே - இந்த ஆக்டின்படி வசூல்செய்யப்படத்தக்க யாதொரு சுங்கம் - தீர்வை - வாடகை-வீத வரி அல்லது கட்டணம் என்பதும் அடங்கும் ;

"மரக்கலம்."

(13) "மரக்கலம்" என்பது - மனிதர்களையாவது சொத்தையாவது தண்ணீர் வழியாய்க் கொண்டுபோவதற்காகச் செய்யப்பட்ட யாதொரு பொருளென்று அர்த்தமாகும் ;

(14) "(வார்ப்) ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை" என்பதிலே, சரக்குகளை ஏற்றுவதற்காவது இறக்குவதற்காவது உபயோகமாகும் யாதொரு சுவர் அல்லது நிற்பதற்கான யாதொரு நிலையென்பதும், அந்தப்படி உபயோகமாகும் வெளிக்கரையின் யாதொரு பாகமென்பதும், அதைச் சுற்றிலுமாகிலும் அதன் சமீபமாயாகிலும் இருக்கிற யாதொரு சுவரென்பதும் அடங்கும்.

"ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை."

## 2–ம் அத்தியாயம்.

### ட்ரஸ்டிகள் சேர்ந்த போர்டார்.

4. இதிலே பின்னால் சொல்லியிருக்கிற திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, இந்த ஆக்டின் நிபந்தனைகளை அமுலுக்குகொண்டுவரும் கடமையானது-"தூத்துக்குடி ரேவு ட்ரஸ்டிகள்" என்று பெயர் வழங்கும் ஒரு போர்டாருடையதாகும்; அப்படிப்பட்ட போர்டார்-சட்டப்படிக்குண்டான ஓர் சபையாராயிருக்கவேண்டியதுமல்லாமல், இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவர் வந்து கொண்டிருக்கவேண்டும்; மேலும், அவர்கள் பொதுவான முத்திரையுடையவர்களாவார்கள்; அன்றியும், (வியாஜ்ஜியம் தொடர்வதாயிருந்தால்) மேலே சொல்லப்பட்ட பெயரால் அவர்கள் வியாஜ்ஜியம் தொடரவும் அவர்கள் மேல் வியாஜ்ஜியம் தொடரப்படவும் வேண்டும்.

இந்த ஆக்டை அமுலுக்குக் கொண்டுவரும் கடமையை ஒரு போர்டாருக்கு விதிப்பது.

5. அக்கிராசனாதிபதி - உப அக்கிராசனாதிபதி உட்பட ஒன்பது பேருக்குக் குறையாமலும் பதின்மூன்று பேருக்கு மேற்படாமலும் பிரதேச கவர்ன்மென்டாரால் பிரசித்தஞ்செய்யப்படக்கூடிய சங்கியையுள்ள ட்ரஸ்டிகள் ஷை போர்டில் இருக்கவேண்டும். ஆனால், அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதியானவர் பதினைன்கு தினத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கு ரஜாவின்மேல் போயிருந்து, அவருக்கு பதிலாக வேலை பார்க்க வேறொரு அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதி நியமிக்கப்படும் பட்சத்தில், அவர் - ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகும்; மேலும், அவர் வேலைக்குத் திரும்பிவருவதன்மேல் மறுபடியும் ட்ரஸ்டியாவார்.

போர்டின் அமைப்பு.

ட்ரஸ்டிகளில் மூன்று பேருக்குக் குறையாமல் இந்தியர்களாகவும் நான்கு பேருக்கு மேற்படாமல் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கவேண்டும்.

6. (1) அக்கிராசனாதிபதியையும் உப அக்கிராசனாதிபதியையும் பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கவேண்டும். மிகுதியுள்ள ட்ரஸ்டிகளில் மூன்று பேர் தூத்துக்குடி சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும், இரண்டு பேர் தூத்துக்குடி மியுனிஸிபல் கௌன்ஸிலில் அந்தந்த காலத்திலுள்ள மெம்பர்களாலும் தெரிந்தெடுக்கப்படவேண்டும்; அவர்கள் செலாவணியாய்க்கொண்டிருக்கும் விதிகளை அனுசரித்துக் கூட்டப்பட்டதாயுள்ள ஷை வர்த்தக சங்கம் அல்லது கௌன்ஸிலின் யாதொரு சபையில் அந்தப்படி தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

அக்கிராசனாதிபதியையும் உப அக்கிராசனாதிபதியையும் நேமகஞ்செய்வதும், ட்ரஸ்டிகளைத் தெரிந்தெடுப்பதும், நேமகஞ்செய்யப்படும் ட்ரஸ்டிகளை நியமிப்பதும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நடத்தப்படும் எலெக்ஷனானது - குறைந்தது மூன்று இந்தியர்களும் நான்கு பேருக்கு மேற்படாமல் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களும் ஷை போர்டின் மெம்பர்களாயிக்கும்படிச் செய்யும் நோக்கத்துடன், தெரிந்தெடுக்கப்படும் நபர்களின் யோக்கியதாம்சங்களை நிர்ணயித்துப் பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்படக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு நடத்தப்படவேண்டும்.

(3) ட்ரஸ்டியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயரைப்பற்றியும், சம்பந்தப்பட்ட வர்த்தக சங்கம் அல்லது கௌன்ஸிலின் அக்கிராசனாதிபதியானவர் விவரக் குறிப்பு எழுதி பிரதேச கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும்.

(4) மற்ற ட்ரஸ்டிகளைப் பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கவேண்டும்.

7. ட்ரஸ்டிகளாக நியமிக்கப்பட்ட அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட நபர்களின் பெயர்களை, போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் பிரசித்தம் செய்யவேண்டும்.

ட்ரஸ்டிகளின் பெயர்களைப் பிரசித்தஞ்செய்வது.

8. (1) யாதொரு நபர்—

ட்ரஸ்டி உத்தியோகத்துக்கு யோக்கியதைக் குறைவுகள்.

(a) ப்ரிடிஷ் குடியாயிராவிட்டாலும் இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தைச் சேர்ந்த குடியாயிராவிட்டாலும்,

(b) ட்ரஸ்டியாயிருப்பதற்கு அவரைத் தகுதியற்றதாக்குகிறதென்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படுகிற யாதொரு குற்றத்துக்காக 'குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டு காவல் தண்டனை விதிக்கப்பெற்றிருந்து, அந்த தண்டனை மாற்றப்படாமலிருந்தாலும் ரத்து செய்யப்படாமலிருந்தாலும் மன்னிக்கப்படாமலிருந்தாலும்,

(c) கடனிறுக்க வகையில்லாதவராயிருந்து கடனிறுக்க வகையில்லாதவரென்பதற்கு ஸெர்டிபிகேட் பெறுமலிருந்தாலும் கடன் தீர்க்கச் சக்தியற்றவராயிருந்து விடுதலை செய்யப்படாமலிருந்தாலும்,

(d) போர்டாரிடத்தில் யாதொரு உத்தியோகத்திலோ லாபம் கிடைக்கத்தக்க வேலையிலோ இருந்தாலும்,

ஆனால். இந்த யோக்கியதைக் குறைவு அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்குப் பிரயோகப்படமாட்டாது; பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதிக்குட்பட்டு, அவர் போர்டாரிடத்தில் 27-வது பிரிவில் குறிப்பிடப்படும் உத்தியோகங்களில் எதையாகிலும் வகிப்பதற்கு அவருக்கு அனுமதி கொடுக்கப்படலாம்;

(e) போர்டாருடைய உத்தரவின்படி செய்யப்பட்ட யாதொரு வேலையிலாகிலும், போர்டாருடனாவது அவர்களாலாவது அவர்களுக்காகவாவது செய்யப்பட்ட யாதொரு ஒப்பந்தம் அல்லது அலுவலிலாகிலும் நேராகவோ நேராகவல்லாமல் மற்றப்படியோ யாதொரு பங்கு அல்லது பற்றுள்ளவராயிருந்தாலும்,

அவர் ட்ரஸ்டியாயிருக்கத் தகுதியுள்ளவராகமாட்டார்.

எந்த நபரும்—

(i) போர்டாரோடு ஒப்பந்தம் செய்துகொள்ளும் அல்லது போர்டாராலாகிலும் அவர்களுக்காகவாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் யாதொரு ஜாய்ன்ட் ஸ்டாக் கம்பெனியில் பங்குடையவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(ii) போர்டாரின் காரியங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விளம்பரம் பிரசுரம் செய்யப்படக்கூடிய யாதொரு சமாசார பத்திரிகையில் பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(iii) போர்டாருக்குக் கொடுத்திருக்கும் யாதொரு கடன் தொகையில் பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(iv) அசையாப்பொருள் சம்பந்தமான யாதொரு குத்தகையிலாவது விற்பனையிலாவது பரிவர்த்தனையிலாவது அதைக் கிரயத்துக்கு வாங்குவதிலாவது அதற்குரிய யாதொரு உடன்படிக்கையிலாவது பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(v) போர்டார் கொடுத்திருக்கும் யாதொரு லைஸென்ஸிலாவது, போர்டாரைச் சேர்ந்த (docks) டாக்குகளிலுள்ள எந்த ரெயில்வே ஸைடிங்கையாகிலும் மரக்கலங்கள் தங்குகிற இடத்தையாகிலும் முழுவதும் எந்த தாமேயாயினும் மற்றவர்களைவிட சிலாக்கியமாகவாயினும் உபயோகிக்க போர்டாரோடு செய்துகொண்ட உடன்படிக்கை மூலமாக அல்லது வேறே விதமாக ஏற்பட்ட யாதொரு சுதந்தரத்திலாவது பங்கு அல்லது பற்றுள்ளவராயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(vi) தாம் வியாபாரம் செய்கிற யாதொரு சாமானை எந்த ஸர்க்கார் வருஷத்திலாவது இரண்டாயிரம் ரூபாய்க்கு அதிகப்படாத ஒரு விலை மதிப்புக்கு போர்டாருக்கு ஏதோ சில சமயங்களில் விற்பனை செய்வதிலே பங்கு அல்லது பற்றுள்ளவாயிருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

(vii) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் அலுவல்களில் ஏதாவது 41-வது பிரிவின்படி எந்த நபரிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்குமோ அந்த நபராகவாவது, எந்த பர்ம் என்னும் வர்த்தகக்கூட்டம் அல்லது கம்பெனியிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்குமோ அந்த வர்த்தகக்கூட்டம் அல்லது கம்பெனியின் மெம்பராகவாவது இருக்கிற காரணத்தினால் மாத்திரமேயாகிலும்,

ஷை வேலை, ஒப்பந்தம் அல்லது அலுவலில் பங்கு அல்லது பற்றுள்ளவராயிருப்பதாகக் கருதப்படமாட்டார்.

(2) யாதொரு ட்ரஸ்டியானவர்—

(a) மேலேகண்ட காரணங்களில் எதனாலாகிலும் யோக்கியதையற்றவராய் விட்டாலும்,

(b) வேலைபார்க்க மறுத்தாலும் வேலைபார்க்க அசக்தராய்விட்டாலும்,

(c) போர்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், போர்டாருடைய சாதாரண சபைகளில் தொடர்ச்சியாய் மூன்று சபைகளுக்கு வரத்தவறிப் போய்விட்டாலும்,

(d) தொடர்ச்சியாய் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு போர்டாரின் சபைகளுக்கு வராமலிருந்தாலும்,

அவர் - ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகும்.

அக்கிராசனாதிபதி, உப அக்கிராசனாதிபதி, ட்ரஸ்டிகள் ஆகிய இவர்களின் உத்தியோக கால அளவு.

9. அக்கிராசனாதிபதியும் உப அக்கிராசனாதிபதியும் - பிரதேச கவர்ன்மென்டார் இஷ்டப்படுகிற காலம் வரையில் உத்தியோகம் வகித்திருக்கவேண்டும். மிகுதியுள்ள ட்ரஸ்டிகள் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருஷகாலம் வரையில் உத்தியோகம் வகித்திருக்கவேண்டும்; ஆனால், பிரதேச கவர்ன்மென்டார்-யாதொரு ட்ரஸ்டியின் ராஜிநாமாவை எந்தக் காலத்திலாகிலும் அங்கீகரிக்கலாம்.

ட்ரஸ்டிகளை முதல் தடவை தெரிந்தெடுப்பதும், அக்கிராசனாதிபதியையும் உப அக்கிராசனாதிபதியையும் நேமகம் செய்யப்படும் ட்ரஸ்டிகளையும் முதல் தடவை நியமிப்பதும்.

10. பிரசித்தம் செய்யப்படக்கூடிய தேதிகளில் முதலில் தெரிந்தெடுக்கப்படவேண்டிய ட்ரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கவேண்டியதுமல்லாமல், முதல் அக்கிராசனாதிபதியையும் உப அக்கிராசனாதிபதியையும் நேமகஞ் செய்யப்படவேண்டிய ட்ரஸ்டிகளையும் நேமகம் செய்யவும்வேண்டும்.

ட்ரஸ்டிகள் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவர்களாயிருப்பது.

11. எந்த நபர் ட்ரஸ்டியாயிருப்பது நின்றுபோகிறதோ அந்த நபர் - 8-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யோக்கியதையற்றவராய்விட்டாலொழிய, மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது மறுபடியும் நியமிக்கப்படுவதற்காவது தகுதியுள்ளவராவார்.

காலி நேரிட்டால் அக்கிராசனாதிபதியையாவது உப அக்கிராசனாதிபதியையாவது ட்ரஸ்டியையாவது தெரிந்தெடுப்பது அல்லது நியமிப்பது.

12. 6-வது பிரிவின்படி தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு ட்ரஸ்டியின் உத்தியோகத்தில் காலி நேரிடுவதன்மேல், அந்த காலி ஸ்தானமானது - அதில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாக சந்தர்ப்பத்துக்கேற்றபடி சேம்பர் ஆவ் காமர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாராலாவது மியுனிஸிபல் கௌன்ஸிலாராலாவது ஒரு மாதத்துக்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும். 6-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட அக்கிராசனாதிபதியாவது உப அக்கிராசனாதிபதியாவது வேறே யாதொரு ட்ரஸ்டியாவது உத்தியோகம் வகிப்பது நின்றுபோனால், பிரதேச கவர்ன்மென்டார் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி அக்கிராசனாதிபதியையாகிலும் உப அக்கிராசனாதிபதியையாகிலும் ட்ரஸ்டியையாகிலும் நியமிக்கலாம்.

தெரிந்தெடுக்கப்படும் ட்ரஸ்டிகளைத் தெரிந்தெடுக்கத் தவறிப்போனால் அவர்களைப் பிரதேச கவர்ன்மென்டார் நேமகம் செய்வது.

13. 10-வது பிரிவின்படி பிரசித்தம் செய்யப்படும் தேதியன்றைக்காகிலும் 12-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கும் கால அளவுக்குள்ளாகிலும் யாதொரு ட்ரஸ்டி தெரிந்தெடுக்கப்படாவிட்டால், பிரதேச கவர்ன்மென்டார் ஒரு ட்ரஸ்டியை நியமிக்கலாம்; மேலும், அந்தப்படி நியமிக்கப்படும் நபர் தெரிந்தெடுக்கப்பட்ட ட்ரஸ்டியாகக் கருதப்படுவார்.

அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கு ரஜா கொடுப்பது.

14. பிரதேச கவர்ன்மென்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற ரஜாவை அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கு அப்போதைக்கப்போது கொடுக்கலாம்; அப்படி ரஜா கொடுத்து வேலைக்கு வராதிருக்கிற யாதொரு காலத்தில் அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கு பதிலாக வேலை பார்க்கும்படி பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட யாதொரு நபர் அப்படி தாம் பதிலுக்கிருக்கிற காலத்தில் இந்த ஆக்டின் சகல காரியங்களின்பொருட்டும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதியாகக் கருதப்படுவார்.

யாதொரு ட்ரஸ்டிக்கு பதிலாக வேலை பார்க்க வேறே ட்ரஸ்டியை நியமிப்பது.

15. (1) யாதொரு ட்ரஸ்டி மூன்று மாதத்துக்கதிகமாய் வெளியே போயிருக்கவேண்டுமென்கிற உத்தேசத்தோடு தூத்துக்குடியைவிட்டுப் போவாராகில், அப்படி வெளியே போயிருக்கிற ட்ரஸ்டி தூத்துக்குடிக்குத் திரும்பிவருகிற வரையிலாவது ட்ரஸ்டி வேலையிலிருந்து நீங்குகிறவரையிலாவது அவருக்கு பதிலாக வேலை பார்க்கும்படி 6-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாக ஒரு நபர் தெரிந்தெடுக்கப்படவேண்டும் அல்லது நியமிக்கப்படவேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட நபர் - தாம் யாருக்கு பதிலாக வேலை பார்க்கிறாரோ அவர் என்னென்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டவராயும் என்னென்ன சலக்கரணைகளுக்கு பாத்தியதை உடையவராயுமிருந்தாரோ அந்தப்படியே இருக்கவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட உத்தேசத்துடன் யாதொரு ட்ரஸ்டி போனாரா என்பது விஷயமாய் சந்தேகம் ஏதாவது உண்டானால், அந்த சந்தேகத்தின் விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கும் பதிலாய் வேலை பார்க்கும் அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கும் பிரதிபலன் கொடுப்பது.

16. அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கும் அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதி ரஜாவிலிருக்கும்போது அவருக்கு பதிலாக வேலை பார்க்கும்படி 14-வது பிரிவின்பிரகாரம் நியமிக்கப்பட்ட நபருக்கும் சம்பளமாகவோ ரஜாவர்த்தனையாகவோ இதர வர்த்தனையாகவோ பிரதிபலன் ஏதாகிலும் கொடுக்கவேண்டியதாயிருந்தால் அதைப் பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது நிச்சயிக்கலாம்; மேலும், அவர்கள் - இன்ன திட்டங்களின்மேலும் இன்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட பிரதிபலன் கொடுக்கத்தக்கதாகுமென்பதையும் நிர்ணயிக்கலாம்.

அக்கிராசனாதிபதிக்கும் உப அக்கிராசனாதிபதிக்கும் இதர ட்ரஸ்டிகளுக்கும் கொடுக்கப்படத்தக்க கட்டணங்கள்.

17. அக்கிராசனாதிபதிக்கும் உப அக்கிராசனாதிபதிக்கும் இதர ட்ரஸ்டிகளுக்கும் சபைகளுக்கு வருவதற்காக கட்டணம் ஏதாகிலும் கொடுக்கவேண்டியிருந்தால் அதைப் பிரதேச கவர்ன்மென்டார் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கலாம்; மேலும், அவர்கள் - இன்ன திட்டங்களின்மேலும் இன்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அப்படிப்பட்ட கட்டணம் கொடுக்கத்தக்கதாகுமென்றும் நிர்ணயிக்கலாம்.

போர்டாருடைய நடவடிக்கைகளைக் குறித்து நிபந்தனைகள்.

18. போர்டாருடைய நடவடிக்கைகளைக்குறித்து அடியிற்கண்ட நிபந்தனைகளை அனுசரிக்கவேண்டும். அவையாவன :—

காரியத்தை நடத்துவதற்காகக் கூட்டப்படும் சபைகள் முதலியவை.

(1) அடியிற்கண்ட திட்டங்களுக்குட்பட்டு, போர்டார் சபை கூடவேண்டும்; மேலும், அவர்கள் - தாங்கள் சபைகள் கூடுகிற இடத்தைக்குறித்தும் தினத்தைக்குறித்தும் மணிநேரத்தைக்குறித்தும் அவைகளைப்பற்றிய அறிக்கையைக்குறித்தும் அவைகளை நிர்வாகம் செய்வதைக்குறித்தும் தள்ளிவைப்பதைக்குறித்தும் பொதுவாய்க் காரியங்களை நடத்துவதைக்குறித்தும் இந்த ஆக்டுக்கு முரண்படாமல் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற ஏற்பாடுகளை அப்போதைக்கப்போது செய்யவேண்டும்; அந்த திட்டங்கள் என்னவென்றால் :—

மாதத்துக்கொருமுறை கூடும் சாதாரண சபைகள்.

(a) ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு முறை ஒரு சபை கூடவேண்டும்;

விசேஷ சபைகள்.

(b) அக்கிராசனாதிபதியானவர் தமக்கு யுக்தமாகத் தோற்றுகிறபோதெல்லாம் விசேஷ சபை கூட்டலாம்: மூன்று பேருக்குக் குறையாத ட்ரஸ்டிகள் எழுதிக் கேட்டுக்கொண்டால அப்படியே விசேஷ சபை கூட்டவேண்டும்;

* க்வோரம்.

(c) யாதொரு சபைக்கு அதமம் ஐந்து ட்ரஸ்டிகள் வந்து அந்த சபை நடக்கும் காலம் முழுவதும் இருந்தாலொழிய, அதில் யாதொரு காரியமும் நடத்தக்கூடாது;

கூட்டத்தில் சபைத்தலைவர்.

(d) பிரதி சபையிலும் அந்த சபை கூடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அக்கிராசனாதிபதி வந்திருந்தால் அவரும், அவர் வராவிட்டால் உப அக்கிராசனாதிபதியும், இருவரும் வராவிட்டாலும வராமலிருக்கையிலும், வந்திருக்கிற ட்ரஸ்டிகளுக்குள்ளே சபையாரால் தெரிந்தெடுக்கப்படக்கூடிய ஒருவரும் சபைத்தலைவராக வீற்றிருக்கவேண்டும்;

சங்கதிகளைப் பெருந்தொகையாருடைய அபிப்பிராயத்தின்படி தீர்மானிப்பது.

(e) வந்திருக்கிற ட்ரஸ்டிகளில் பெருந்தொகையாருடைய அபிப்பிராயப்படி சகல சங்கதிகளையும் தீர்மானிக்கவேண்டும்; அபிப்பிராயங்கள் சமமாக வேறுபடுகிற சகல விஷயங்களிலும் சபைத்தலைவர் இரண்டாவது அல்லது முடிக்கும்படியான அபிப்பிராயம் கொடுக்கத்தக்கவராவார்;

வோட்டைப்பற்றிய விவரங்களை எழுதிவைக்கவேண்டுமென்று கேட்பது.

(f) வோட்டைப்பற்றிய விவரத்தை எழுதிவைக்கவேண்டுமென்று கேட்டால், வோட் கொடுக்கிற ட்ரஸடிகளின் பெயரையும் அவர்களுடைய வோட்டுகள் இப்படிப்பட்டவை யென்பதையும் சபைத்தலைவர் எழுதிவைக்கவேண்டும்;

நடவடிக்கைகளுக்குக் குறிப்புகள்.

(g) பிரதி சபைக்கும் வந்திருக்கிற ட்ரஸ்டிகளின் பெயரையும் அதில் நடக்கிற நடவடிக்கைகளையும் குறித்து இதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் புஸ்தகத்தில் குறிப்பெழுதி வைக்கவேண்டும்; அந்த கூட்டத்தில் சபைத்தலைவராயிருந்தவர் கூடுமான சீக்கிரத்தில் அதில் கையெழுத்துசெய்யவேண்டும்: மேலும், அதை ஆபிஸ் வேலை நடக்கிற காலங்களில் எந்த ட்ரஸ்டியாவது பார்க்கவேண்டுமென்றால் அவரை அப்படியே பார்க்கவொட்டவேண்டும்;

---

* ஒரு கூட்டத்தில் காரியம் நடத்துவதற்குக் குறைந்தது எத்தனைபேர் கூடியிருக்கவேண்டுமோ அத்தனைபேர்.

சபைகளைத் தள்ளிவைப்பது.

(h) யாதொரு சபைக்கு வந்திருப்பவர்களுடைய அனுமதியின்மேல் சபைத்தலைவர் அந்த சபையைத் தள்ளிவைக்கலாம் ;

கவர்ன்மெண்டாருக்குக் குறிப்புகள் அனுப்புவதும், அவைகளை கெஜெட்டில் பிரசுரம் செய்வதும்.

(i) போர்டார் கூடுகிற பிரதி சபையின் குறிப்புகளுக்கும் நகலானது - அதைப் பெற்றுக்கொள்வதற்காக அப்போதைக்கப்போது நியமிக்கப்படும் பிரதேச கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரிக்கு எவ்வளவு சீக்கிரத்தில் சௌகரியமாய் அனுப்பக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அனுப்பப்படவேண்டியதுமல்லாமல், தீநுநெல்வேலீ ஜில்லா கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்படவும் வேண்டும்.

போர்டார் கம்மிட்டிகளை நியமிப்பது.

(2) போர்டார் - தங்களால் விவரிக்கப்படக்கூடிய அதிகாரங்களைக் கொடுத்தும், தங்களால் விவரிக்கப்படும் கற்பனைகள் - உத்தரவுகள் அல்லது வரையறைகளுக்குட்படுத்தியும், இந்த ஆக்டின் நிபந்தனைகளில் எந்த பாகத்தையாவது நிறைவேற்றுவதற்காக, தங்களுக்குள் ஐந்து பேருக்குக் குறையாத நபர்கள் அடங்கிய கம்மிட்டிகளை அப்போதைக்கப்போது நியமிக்கலாம். போர்டார் எப்போதாவது அப்படிப்பட்ட யாதொரு கம்மிட்டியின் அமைப்பை மாற்றலாம், அல்லது அந்தக் கம்மிட்டியை நிறுத்திவிடலாம்.

கம்மிட்டியாருடைய சபைகளின் சபைத்தலைவர்.

(3) யாதொரு கம்மிட்டியார் தாங்கள் கூடுகிற சபைகளுக்காக ஓர் சபைத்தலைவரைத் தெரிந்தெடுக்கலாம் ; அப்படிப்பட்ட யாதொரு சபைத்தலைவர் தெரிந்தெடுக்கப்படாவிட்டாலும், அந்த சபை கூடுகிறதற்காக நியமிக்கப்பட்ட காலத்தில் அவர் வராதிருந்தாலும், வந்திருக்கிற மெம்பர்கள் அந்த சபைக்குத் தலைவராயிருக்க தங்களுக்குள்ளே ஒருவரைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

கம்மிட்டியார்கள் சபை கூடுவது.

(4) கம்மிட்டியார்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி சபைகூடலாம், அதைத் தள்ளிவைத்துக்கொள்ளலாம் ; ஆனால், போர்ட் அக்கிராசனாதிபதி தமக்குயுக்தமாகத் தோற்றுகிறபோதெல்லாம் அப்படிப்பட்ட கம்மிட்டியாரின் விசேஷ சபை கூட்டிவைக்கலாம் ; யாதொரு கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களில் இரண்டு பேருக்குக் குறையாதவர்கள் எழுத்துமூலமாய்க் கேட்டுக்கொண்டால் அவர் அப்படிப்பட்ட விசேஷ சபை கூட்டிவைக்க வேண்டும்.

கம்மிட்டியாரின் சபைகளில் சங்கதிகளைத் தீர்மானம் செய்வது.

(5) கம்மிட்டியார் கூடுகிற யாதொரு சபையிலே வந்திருக்கிற மெம்பர்களில் பெருந்தொகையாருடைய அபிப்பிராயப்படி சங்கதிகளைத் தீர்மானிக்கவேண்டும் ; அபிப்பிராயங்கள் சமமாக வேறுபட்டிருக்கிற விஷயத்தில், சபைத்தலைவர் இரண்டாவது அல்லது முடிக்கும்படியான அபிப்பிராயம் கொடுக்கத்தக்கவராவார்.

கம்மிட்டிகளில் க்வோரம்.

(6) அப்படிப்பட்ட யாதொரு சபை நடக்கும் காலம் முழுவதும் கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களில் குறைந்தது மூன்றுபேர் வந்திருந்தாலொழிய, அந்த சபையில் யாதொரு வேலையையும் நடத்தக் கூடாது.

ட்ரஸ்டிகளுக்குப் பற்றுள்ள விஷயங்களில் வோட் கொடுக்கவாவது வாதம் செய்யவாவது அவர்களுக்குள்ள அதிகாரத்தைப்பற்றிய நிர்ப்பந்தம்.

19. (1) போர்டாரின் அல்லது யாதொரு கம்மிட்டியின் சபையில் ஆலோசனைக்கு வரும் யாதொரு விஷயமானது யாதொரு ட்ரஸ்டி தாமாகவேயாகிலும் தம்முடைய பாகஸ்தர் மூலமாகவாகிலும் நேராகவோ அல்லது நேராகவல்லாமல் மற்றப்படியோ திரவியசம்பந்தமாய்ப் பற்றுள்ளவராயிருக்கிற விஷயமாக இருந்தாலும், தொழில் முறையில் யாதொரு கட்சிக்காரர் சார்பிலாவது கவர்ன்மெண்டார், யாதொரு பிரதேச அதிகாரசபை அல்லது யாதொரு ரெயில்வே கம்பெனி அல்லாத வேறே யாதொரு நபரின் ஏஜெண்டாகவாவது தாம் பற்றுள்ளவராயிருக்கிற விஷயமாக இருந்தாலும், ஷை ட்ரஸ்டியானவர் - அந்த விஷயத்தைப் பற்றி வாதம் நடக்கும்போது வோட் கொடுக்கவுங்கூடாது, அந்த வாதத்தில் கலந்துகொள்ளவுங்கூடாது.

(2) சபைக்கு முன் வந்திருக்கும் யாதொரு விஷயத்தில் எந்த ட்ரஸ்டியாகிலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி பற்றுள்ளவராயிருக்கிறாரென்று ஆட்சேபனை செய்யப்பட்டால், பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாக இதர ட்ரஸ்டிகள் ஷை ஆட்சேபனையைக் குறித்து ஆலோசித்து முடிவுசெய்யவேண்டும். இதர ட்ரஸ்டிகள் செய்யும் முடிவு அறுதியானதாகும்.

(3) யாதொரு விஷயத்தைப்பற்றி வாதம் நடந்தபோது (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாக யாதொரு ட்ரஸ்டி வோட் கொடுத்தாரென்றாகிலும் வாதத்தில் கலந்துகொண்டாரென்றாகிலும் அக்கிராசனாதிபதியிடத்தில் ஆட்சேபனை செய்யப்பட்டால், பிரஸ்தாப தீர்மானத்தை அனுசரித்து மூன்றும் நபருக்கு பாத்தியதை உண்டாக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளின் பிரகாரம் ஷை ஆட்சேபனையைக்குறித்து விசாரித்து முடிவுசெய்ய வேண்டும் ; அந்தப்படி செய்யும் முடிவு அறுதியானதாகும். அந்தப்படி முடிவு செய்யப்

படுகிற வரையில், பிரஸ்தாப விஷய சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது. (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்கு விரோதமாய் ஷை ட்ரஸ்டி வோட் கொடுத்தாரென்றாகிலும் வாதத்தில் கலந்துகொண்டாரென்றாகிலும் முடிவு செய்யப்பட்டால், பிரஸ்தாப விஷய சம்பந்தமாய்ச் செய்யப்பட்ட தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாது.

நடத்தப்பட்ட காரியங்களும் நடவடிக்கைகளும் செலாவணியாவது.

20. போர்டாராவது யாதொரு கம்மிட்டியாராவது அக்கிராசனாதிபதியாகவோ உப அக்கிராசனாதிபதியாகவோ பிரவர்த்திக்கிற யாதொரு நபராவது நடத்தும் எந்தக் காரியமாயினும் நடவடிக்கையாயினும் - ஷை போர்டாரை அல்லது கம்மிட்டியாரை ஸ்தாபிப்பதில் குறைவு ஏதாவது இருந்ததென்னும் காரணத்தினால் மாத்திரமேயாகிலும், யாதொரு ட்ரஸ்டி அந்த உத்தியோகத்துக்கு யோக்கியதையற்றவரா யிருந்தாரென்னும் ஹேதுவினாலாகிலும், அக்கிராசனாதிபதி, உப அக்கிராசனாதிபதி அல்லது யாதொரு ட்ரஸ்டி உத்தியோகத்தில் காலி ஏதேனும் நேரிட்டிருந்த காலத்தில் ஷை காரியம் நடத்தப்பட்டதென்னும் காரணத்தினாலாகிலும் செலாவணியற்றதாகக் கருதப்படமாட்டாது.

அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதிக்கு அதிகாரங்களைக் கொடுப்பது.

21. போர்டார் - தங்களுக்கு இந்த ஆக்டின்படி கொடுக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவதிருக்கிற அதிகாரங்களிலும் அலுவல்களிலும் இன்னதை அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதி செலுத்தலாமென்றும் செய்யலாமென்றும் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்மேல் எழுத்துமூலமான தீர்மானத்தைக் கொண்டு நிச்சயிக்கலாம்.

அக்கிராசனாதிபதியின் அலுவல்கள்.

22. (1) வியாதியினாலாவது வேறே நியாயமான காரணத்தினாலாவது வரக்கூடாமற்போனாலொழிய போர்டாருடைய பிரதி சபைக்கும் வருவதும்,

(2) பரிபாலன காரிய நிர்வாக விஷயங்களிலும் போர்டாருடைய கணக்குகளையும் ரெகார்டுகளையுங்குறித்த விஷயங்களிலும் போர்டாருடைய சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் நடத்துகிற காரியங்களின் மேலும் நடவடிக்கைகளின்மேலும் மேற்பரிசோதனை பண்ணுவதும் மேலதிகாரம் செலுத்துவதும்,

(3) 24-வது, 97-வது பிரிவுகளின்படி நிர்ணயிக்கப்பட்ட ரெகுலேஷன்களுக்கும், 23-வது பிரிவின்படி போர்டாரால் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற ஷெட்யூலுக்குமுட்பட்டு, போர்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் - ஊழியக்காரர்கள் - ஆகிய இவர்களுடைய ஊழியத்தையும் இவர்களுடைய சம்பளம் - சலக்காணைகள் - வர்த்தனைகளாகிய இவைகளையுங்குறித்த சகல அம்சங்களையும் பைசல் செய்வதும்

அக்கிராசனாதிபதியின் வேலையாகும் :

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டாரின் மேல் விசாரணைக்குட்பட்டு, அக்கிராசனாதிபதியானவர் - அப்போதைக்கப்போது தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி, ஷை அலுவல்கள் எல்லாவற்றையுமாவது அவைகளில் எதையாவது உப அக்கிராசனாதிபதிக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

## 3-ம் அத்தியாயம்.

### அக்கிராசனாதிபதி உப அக்கிராசனாதிபதி தவிர இதர உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும்.

போர்டாருடைய சிப்பந்தியைக் குறித்த ஷெட்யூல்.

23. இந்த ஆக்டின் காரியங்களின்பொருட்டு எவர்களை வேலையில் வைத்துக்கொண்டிருப்பது போர்டாருக்கு அவசியமாகவும் தகுதியாகவும் தோற்றுகிறதோ அப்படிப்பட்ட ஊழியக்காரர்களும், அக்கிராசனாதிபதி உப அக்கிராசனாதிபதி தவிர இதர உத்தியோகஸ்தர்களும் இத்தனைபேரென்று குறிக்கப்பட்ட ஷெட்யூலொன்றை போர்டார் அப்போதைக்கப்போது தயார்செய்து அதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். மேலும், அப்படிப்பட்ட பிரதி உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரருக்கும் செலுத்துகிறதென்று போர்டார் அனுமதி கொடுக்கிற சம்பளங்கள் - கட்டணங்கள்-வர்த்தனைகளாகிய இவைகள் இவ்வளவு என்பதையும் இப்படிப்பட்டவை என்பதையும் அந்த ஷெட்யூலில் காணவேண்டும்.

**விவரணம்.**—கைத்தொழில்வேலை செய்கிறவர்களும், போர்ட்டர்களும் (சுமை ஆள்களும்), உழைப்பு ஆள்களும், போர்ட்டர்களையும் உழைப்பு ஆள்களையும் சர்ப்பரா பண்ணுகிறவர்களும் - இந்தப் பிரிவின் அல்லது 24-வது அல்லது 26-வது பிரிவின் தாற்பரியப்படி உத்தியோகஸ்தர்களுமல்ல, ஊழியக்காரர்களுமல்ல.

ரஜா கொடுப்பதைப் பற்றியும்,

24. (1) (a) போர்டாருடைய (அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதி தவிர வேறே) உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜா கொடுப்பதை ஒழுங்குபடுத்துவதற்காகவும்,

*வராதவர்களுக்குச் சேரவேண்டிய வர்த்தனைகளைப்பற்றியும்,*

(b) மேற்படி உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களுமாவது அவர்களில் யாராவது ரஜா வாங்கிக்கொண்டு வாராமலிருக்கிறபோது அவர்களுக்கு வர்த்தனைகளைச் செலுத்தும்படி அதிகாரம் கொடுப்பதற்காகவும்,

*பதிலுக்காக வேலைபார்க்கிறவர்களுக்குச் சேரவேண்டிய வர்த்தனைகளைப் பற்றியும்,*

(c) அப்படிப்பட்ட எந்த உத்தியோகஸ்தர்களாவது ஊழியக்காரர்களாவது ரஜா வாங்கிக்கொண்டு வாராமலிருக்கிறபோது அவர்களுக்கு பதிலாய் நியமிக்கப்பட்ட நபர்களுக்குச் சேரவேண்டிய பிரதிபலனை நிர்ணயிப்பதற்காகவும்,

*இவ்வளவு காலம் உத்தியோகம் செய்யவேண்டுமென்பதைப்பற்றியும்,*

(d) அப்படிப்பட்ட சகல உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் இவ்வளவு காலம்வரையில் உத்தியோகம் செய்யவேண்டுமென்று ஒழுங்குபண்ணுவதற்காகவும்,

*பென்ஷன் முதலியவற்றைப்பற்றியும்,*

(e) அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களுமாவது அவர்களில் எவராவது உத்தியோகத்திலிருந்து கடைசியாய் நீங்கிப்போகும்போது பென்ஷன் - க்ராட்யூட்டி (நன்கொடை) - அல்லது தயாவிஷயமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனைகளைப் பெற்றுக்கொள்ள இன்ன திட்டங்களின்படி பாத்தியதை உள்ளவராவார்களென்பதையும், அந்த பென்ஷன் - க்ராட்யூட்டி அல்லது தயாவிஷயமான வர்த்தனை இவ்வளவென்பதையும் தீர்மானிப்பதற்காகவும்,

*ப்ராவிடெண்ட் பண்டுக்கு சகாயத்தொகைகளைச்செலுத்துவதைப் பற்றியும்,*

(f) இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களாலும் ஊழியக்காரர்களாலும் போர்டாருடைய அங்கீகாரத்தின்மேல் ஸ்தாபிக்கப்படக்கூடிய யாதொரு ப்ராவிடெண்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாய நிதியிலாவது, ஷை உத்தியோகஸ்தர்கள் - ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களுடைய பிரயோசனத்திற்காகப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்தின்மேல் போர்டாரால் ஏதாவது ப்ராவிடெண்ட் பண்ட் ஸ்தாபிக்கப்பட்டால் அதிலாவது, போர்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய வீதங்களின்படிக்கும் அந்தப்படி நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டும் சகாயத்தொகைகள் செலுத்துவதற்கு அதிகாரம் கொடுப்பதற்காகவும்,

*போர்டாரிடத்தில் ஊழியம் செய்துகொண்டிருக்கையில் துன்பமடைந்த அல்லது இறந்துபோன ஷை உத்தியோகஸ்தர்கள் விஷயத்தில் பென்ஷன் கொடுப்பதைப்பற்றியும்,*

(g) ஷை உத்தியோகஸ்தர்களிலும் ஊழியக்காரர்களிலும் தங்களிடத்தில் ஊழியம் செய்துகொண்டிருக்கையிலே துன்பமடைந்த எவருக்காவது, அவர்களில் அந்தப்படி ஊழியம் செய்துகொண்டிருக்கையிலே இறந்துபோன யாதொரு நபருக்குப்பின் ஜீவித்திருக்கும் அவருடைய பந்துக்களுக்காவது இன்ன திட்டங்களின்படி பென்ஷன் - க்ராட்யூட்டி (நன்கொடை) - அல்லது தயாவிஷயமான வர்த்தனைகளைக் கொடுக்கலாமென்பதைத் தீர்மானிப்பதற்காகவும்,

(h) பொதுவாய், அம்மாதிரியான விஷயங்களைக்குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

*ரெகுலேஷன்கள் ஏற்படுத்த அதிகாரம்.*

போர்டார் அப்போதைக்கப்போது ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவைச் சேர்ந்த (e), (f), (g) அடையாளமிட்ட பகுதிகளின்படி ஏற்படுத்தப்பட்ட ரெகுலேஷன்கள் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அங்கீகாரத்திற்கு உட்பட்டவைகளாகும்.

(3) 99-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட சகல பென்ஷன்களும் சகாயத்தொகைகளும் வர்த்தனைகளும் போர்டாருடைய ஜெனரல் பண்ட் என்னும் பொதுநிதியிலிருந்து செலுத்தப்படத்தக்கவைகளாகும்.

*கைத்தொழில் வேலைக்காரர்கள், போர்ட்டர்கள் முதலியவர்களுக்காக ரெகுலேஷன்கள் ஏற்படுத்த அதிகாரம்.*

25. 23-வது, 24-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதிக்குட்பட்டு, போர்டார் - கைத்தொழில் வேலைக்காரர்கள், போர்ட்டர்கள், வேலையாள்கள் ஆகிய இவர்களின் பிரயோசனத்துக்காகவும், போர்ட்டர்களையும் வேலையாள்களையும் சர்பரா செய்கிறவர்களின் பிரயோசனத்துக்காகவும் 24-வது பிரிவைச் சேர்ந்த (e) முதல் (g) வரையிலுள்ள பகுதிகளில் கண்ட தன்மையான ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்; மேலும், 99-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அப்படிப்பட்ட யாதொரு ரெகுலேஷன்படி கொடுக்கப்படத்தக்க சகல பென்ஷன்களும் சகாயத் தொகைகளும் வர்த்தனைகளும் போர்டாரின் பொது நிதியிலிருந்து செலுத்தப்படத்தக்கவைகளாகும்.

*உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிக்க அல்லது தண்டிக்க அல்லது அவர்களுக்கு ரஜா கொடுக்க அதிகாரம்.*

26. (1) 24-வது பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்ட ரெகுலேஷன்களுக்குட்பட்டும், 23-வது பிரிவின்படி போர்டாரால் தயார்செய்யப்பட்டு அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் ஷெட்யூலுக்குட்பட்டும், போர்டாருடைய உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிக்கவாவது உத்தியோகவிஷயத்தில் உயர்த்தவாவது சிறிது காலத்துக்கு நீக்கிவைக்கவாவது தள்ளிவிடவாவது அவர்களுக்கு அபராதம் போடவாவது அவர்களைக் கீழ் உத்தி

யோகத்துக்கு மாற்றவாவது அவர்களுக்கு ரஜா கொடுக்கவாவது உண்டாயிருக்கிற அதிகாரத்தை, 100 ரூபாய்க்குக் குறைவான மாதாந்தர சம்பளமுடைய உத்தியோகஸ்தர்கள் விஷயத்திலும் ஊழியக்காரர்கள் விஷயத்திலும் பிரதேச கவர்ன்மெண்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடியபடி அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதியும், மற்ற ஒவ்வொரு விஷயத்திலும் பிரதேச கவர்ன்மெண்டாரும் செலுத்தவேண்டும்.

(2) அக்கிராசனாதிபதியாவது உப அக்கிராசனாதிபதியாவது விதிக்கும் தண்டனைகளின் விஷயத்திலே, போர்டாரிடத்தில் அப்பீல் செய்துகொள்ளலாகும்.

உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களை வேலையிலிருந்து நிவர்த்தி செய்வதற்கு அல்லது வேலையினின்றும் நீங்கும்படி அவர்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு அதிகாரம்.

(3) போர்டாருடைய யாதொரு உத்தியோகஸ்தரோ அல்லது ஊழியக்காரரோ துர்நடத்தை நடந்தாரென்கிற ஹேதுவினாலேயன்றி மற்றப்படி அந்த நபரை வேலையிலிருந்து நிவர்த்தி செய்வதற்காவது, அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் பென்ஷன் - க்ராட்யூட்டி அல்லது தயாவிஷயமான வர்த்தனையைப் பெற்றுக்கொண்டு வேலையினின்றும் நீங்கும்படி அவருக்கு அனுமதி கொடுப்பதற்காவதுள்ள அதிகாரமானது - பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் பிரதேச கவர்ன்மெண்டாராலும், மற்ற சகல விஷயங்களிலும் போர்டாராலும் செலுத்தப்படத்தக்கதாகும்.

போர்டாருடைய உத்தரவுகள் அல்லது ரெகுலேஷன்கள் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெறுவது.

27. 23-வது, 24-வது அல்லது 26-வது பிரிவின்படி போர்டார் செய்கிற பிரதி உத்தரவு அல்லது ரெகுலேஷனும் - போர்டைச்சேர்ந்த ஸெக்ரெடரிக்காகிலும் என்ஜினீருக்காகிலும் ட்ராபிக் மானேஜருக்காகிலும் சீவ் அகௌன்டன்டுக்காகிலும் சம்பந்தப்படுகிற மட்டிலே, முன்னதாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படுவதற்கு உள்ளானதாகும்.

இந்தப் பிரிவிலே "என்ஜினீர்" என்னும் வார்த்தையானது - போர்டாரைச்சேர்ந்த சாதாரண சிப்பந்தியில் அதிக உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் என்ஜினீரென்றும், மாதாந்தர சம்பளத்தின்மேல் போர்டாருக்குக் கன்ஸல்டிங் என்ஜினீராக அப்போதைக்கப்போது வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் யாதொரு நபரென்றும் அர்த்தமாகும்.

## 4-ம் அத்தியாயம்.

### போர்டாருடைய சொத்து.

போர்டார் பரமாயிருக்கும் சொத்து.

28. இந்த ஆக்ட் முழுவதும் செலவாணியாகத் தொடங்குவதன்மேல், 1-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்ட பற்பல அசையாப்பொருள்களும், தூத்துக்குடி ரேவு கன்ஸெர்வென்ஸி போர்ட் என்னும் சபையாரால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது அவர்கள் பரமாயிருக்கும் சகல அசையும்பொருள்களும் போர்டார் பரமாகவேண்டும்; ஆனால், அப்படி ஆகும்போது ஷை சொத்துக்கள் அவைகளின்மேலுள்ள சகல பொறுப்புகளுக்கும் கடன்களுக்கும் உட்பட்டிருக்கவேண்டும்.

சொத்தை எடுத்துக்கொள்ளவும் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கவும் பராதீனப்படுத்தவும் அதிகாரம்.

29. (1) இதில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த ஆக்டின் காரியத்துக்காக, ரேவின் எல்லைக்குள்ளேயாகிலும் வெளியேயாகிலுமிருக்கும் அசையாப்பொருளையாவது அசையும்பொருளையாவது எடுத்துக்கொள்ளவும் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கவும் போர்டாருக்கு அதிகாரம் இருக்கவேண்டும்; மேலும், போர்டார் பரமாயிருக்கக்கூடிய அல்லது போர்டாரால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய யாதொரு அசையாப்பொருளையாவது அசையும்பொருளையாவது குத்தகைக்குவிடவோ விற்றுவிடவோ வேண்டிய அதிகாரமும் போர்டாருக்கு இருக்கவேண்டும்.

(2) ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படாமல் வேறுவிதமாய் யாதொரு அசையாப்பொருளை எடுத்துக்கொண்டாலும், யாதொரு அசையாப்பொருளை விற்பனை செய்தாலும், பத்துவருஷத்துக்கு மேற்பட்ட யாதொரு காலஅளவுக்கு அதை குத்தகைக்கு விட்டாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு செய்யவேண்டும்.

நிலம் எடுத்துக்கொள்வதைக்குறித்த ஆக்ட் பிரயோகப்படுவது.

30. இந்த ஆக்டின் காரியங்களுக்காக யாதொரு அசையாப்பொருள் வேண்டியிருந்தால், பிரதேச கவர்ன்மெண்டார் - பொதுவேலைக்காக அந்த அசையாப்பொருள் வேண்டியிருக்கிறதென்று தெரிவிப்பதுமல்லாமல், நிலம் எடுத்துக்கொள்ளுவதைக்குறித்த 1894-ம் வருஷத்து ஆக்டின்படி அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு

1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

நடவடிக்கை நடத்தும்படி உத்தரவும் செய்யலாம். அப்படிப்பட்ட அசையாப்பொருள் அந்தப்படி எடுத்துக்கொள்ளப்பட்டால், அதற்காகக் கொடுக்கவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்ட பிரதிபலனையும் அதை எடுத்துக்கொள்ளுவதற்குண்டான சகல செலவுகளையும் போர்டார் செலுத்துவதன்மேல் அது அவர்கள் பராமாயிருப்பதாக எண்ணப்படும்.

## 5-ம் அத்தியாயம்.

### வேலைகளும் ஊழியங்களும்.

வேலைகளைச் செய்துமுடிக்கவும் உபகரணங்களை ஏற்படுத்தவும் அதிகாரம்.

31. போர்டார்-ரேவின் காரியங்களுக்காக அவசியமானவைகளாகவாவது யுக்தமானவைகளாகவாவதிருக்கிறதென்று தாங்கள் நிர்ணயிக்கத்தக்க வேலைகளைச் செய்துமுடிக்கலாம், உபகரணங்களை ஏற்படுத்தலாம்.

செய்துமுடிக்கவேண்டிய வேலைகள் அல்லது ஏற்படுத்தவேண்டிய உபகரணங்கள் சாதாரணமாய் இப்படிப்பட்டவையென்பது.

32. அப்படிப்பட்ட வேலைகளிலும் உபகரணங்களிலும்,—

(1) ரேவுக்குள்ளாவது ரேவைச் சேர்ந்த வெளிக்கரையிலாவது, அவசியமாகவும் அனுகூலத்திற்காகவும் வேண்டிய சகல வளைவுகள் - ஜலதாரைகள் - இறங்கும் இடங்கள்-படிக்கட்டுகள் - அடைப்புகள் - ரோட்டுகள் - ரெயில்வேக்கள் - வந்து கூடுகிற வழிகள் - இவை சகிதமாய் ஏற்றிறக்குமதிக்கான செய்கரைகள் - மேட்டுவழிகள் - டாக்குகள் - நிற்பதற்கான நிலைகள் - அணைகள் - சமுத்திரவாராவதிகளும்,

(2) பிரயாணிகளுக்காகவும் சரக்குகளுக்காகவும் ரெயில்வேக்கள் - ட்ராம்வேக்கள்-(லோகொமோடிவ்) என்ஜின்கள் - ஓடும் வண்டிகள் - கொட்டகைகள் - சாமான் கிடங்குகள் முதலிய வசதியிடமும், ரேவுக்குள்ளே பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போவதற்கும் இறக்கப்பட்டாவது கப்பலில் ஏற்றப்படவேண்டியாவது மற்றப்படியாவது இருக்கிற சரக்குகளைக் கொண்டுபோவதற்கும் வரப்பெற்றுக்கொள்வதற்கும் சேர்த்துவைப்பதற்கும் வேண்டிய இதர உபகரணங்களும்,

(3) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்கான கப்பல் கட்டுமிடங்களும், மரக்கலங்களில் சரக்கேற்றவும் அவைகளிலிருந்து இறக்கவும் உபயோகமான க்ரேன்கள் என்னும் சுமைதூக்கும் கருவிகள் - துலாங்கள் முதலிய அவசியமான மற்றெல்லாக் கருவிகளும் உபகரணங்களும்,

(4) இந்த ஆக்டினால் எவைகளைச் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட வேலைகளைச் செய்துமுடிப்பதற்காவது இந்த ஆக்டின் காரியங்களுக்காக மற்றப்படியாவது ரேவைச் சேர்ந்த வெளிக்கரையில் அவசியமாய் வேண்டியிருக்கிற எந்த பாகத்தையாகிலும் ஜலத்தினின்றும் வளைத்துக்கொள்ளுவதும், அதை வெட்டித் தோண்டுவதும், அதற்கு அடைப்படைப்பதும், அதை உயர்த்துவதும்,

(5) ரேவின் எல்லைக்கு உட்புறத்திலாவது வெளிப்புறத்திலாவது ஹார்பர் அல்லது ரேவைப் பாதுகாப்பதற்குத் தகுதியான அலைதாங்கிகள் முதலிய கட்டுவேலைகளும்,

(6) ரேவு அல்லது வெளிக்கரையின் யாதொரு பாகத்தைச் சுத்தப்படுத்துவதற்காகவும் ஆழமாக்குவதற்காகவும் சீர்ப்படுத்துவதற்காகவும் ட்ரெட்ஜர் என்னும் சேறுவாரி முதலிய எந்திரக்கருவிகளும்,

(7) ரேவின் எல்லைகளிலிருந்து மூன்றுமைல் தூரத்திற்குள்ளாக அந்த ரேவில் வந்துகூடுகிற வழிகளிலும் கூடி ரேவிலும் பந்தோபஸ்தாய்க் கப்பல் யாத்திரைசெய்வதற்கு அவசியமாயுள்ள ஆறுகாட்டி கப்பலைச்செலுத்தும் படகுகளும் இதர உபகரணங்களும்,

(8) ரேவில் பிரவேசிக்கிறதாயிருந்தாலுஞ்சரி ரேவைவிட்டுப்போகிறதாயிருந்தாலுஞ்சரி அல்லது வேறே இடத்துக்குப் பயணப்பட்டுப்போகிறதாயிருந்தாலுஞ்சரி யாதொரு மரக்கலத்தை இழுப்பதற்காகவும் அல்லது அதற்கு உதவிபுரிவதற்காகவும், பிராணனையோ அல்லது சொத்தையோ காப்பாற்றுவதற்காகவும் அல்லது பந்தோபஸ்தாய் வைத்திருப்பதற்காகவும், 39-வது பிரிவின்படி பிரயாணிகளையாவது சரக்குகளையாவது கரையிலிறக்குவதற்காகவும் அல்லது கப்பலில் ஏற்றுவதற்காகவும் அல்லது ஒரு கப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்கேற்றுவதற்காகவும் பிரதேச அதிகாரவரம்புக்குட்பட்ட சமுத்திர பாகத்திலிருந்தாலுஞ்சரி வேறே இடத்திலிருந்தாலுஞ்சரி ரேவின் எல்லைகளுக்கு வெளியே எப்படியோ அப்படியே ரேவின் எல்லைகளுக்குள்ளாகவும் உபயோகமாகும் மரக்கலங்கள் - ஸ்டீம் டக்குகள் என்னும் இழுப்பதற்கான நீராவிப்படகுகள் - அல்லது வேறே படகுகளும்,

(9) ரேவிலுள்ள கப்பல்களுக்குத் தண்ணீர் சர்ப்பராசெய்வதற்காக வேண்டியிருக்கும் படகுகளும் சலங்குகளும் வேறே உபகரணங்களும்,

(10) ரேவிலும் போர்டாருடைய சொத்திலும் நெருப்பை அவிப்பதற்கு அவசியமாயிருக்கும் என்ஜின்கள் முதலிய உபகரணங்களும்,

(11) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக போர்டாருக்கு யுக்தமாய்த்தோற்றுகிற மற்ற சகல வேலைகளும் உபகரணங்களும்,

சேரலாம்.

*ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை முதலியவைகளை உபயோகிக்கும்படி சமுத்திரத்தில் செல்லும் மரக்கலங்களை நிர்ப்பந்திக்கலாமென்பது.*

33. சமுத்திரத்தில் செல்லும் மரக்கலங்களிலிருந்தும் அப்படிப்பட்ட மரக்கலங்களிலும் சரக்குகளைக் கரையில் இறக்குவதற்காகவாவது கப்பலில் ஏற்றுவதற்காகவாவது போதுமான சாமான் கிடங்குகள் சகிதமாகவும் கொட்டகைகள் சகிதமாகவும் உபகரணங்கள் சகிதமாகவும் யாதொரு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரையாகிலும் மேட்டுவழியாகிலும் நிற்பதற்கான யாதொரு நிலையாகிலும் ஜெட்டி என்னும் அணையாகிலும் பியர் என்னும் சமுத்திர வாராவதியாகிலும் கட்டி முடிக்கப்பட்டிருந்தால், போர்டார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் தொடர்ச்சியாய் மூன்று பிரசுரங்களிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டின் ஒரு பிரசுரத்திலும் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக, சமுத்திரத்தில் செல்லும மரக்கலங்களிலிருந்தும் அப்படிப்பட்ட மரக்கலங்களிலும் சரக்குகளை சந்தர்ப்பத்துக்கேற்றபடி வரப்பற்றிக்கொள்வதற்கும் கரையில் இறக்குவதற்கும் கப்பலில் ஏற்றுவதற்குமாகிலும் கரையில் இறக்குவதற்காகிலும் கப்பலில ஏற்றுவதற்காகிலும் ஷை செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திர வாராவதி தயாராயிருக்கிறதென்று பிரசித்தம் செய்யலாம்.

மேலேகண்டபடி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதிலிருந்தும் அதற்குப் பிறகும், போர்டார் - ஷை செய்கரையிலாகிலும் மேட்டுவழியிலாகிலும் நிற்பதற்கான நிலையிலாகிலும் அணையிலாகிலும் சமுத்திர வாராவதியிலாகிலும் இடம் இருக்கிறபட்சத்திலே, ரேவுக்குள் இருக்கும் சமுத்திரத்தில் செல்லும்படியான யாதொரு மரக்கலமானது சரக்கை இறக்க ஆரம்பிக்காதிருந்தாலும், சரக்கு ஏற்றிக்கொள்ளப்போவதாயிருந்து அந்தப்படி ஏற்றிக்கொள்ள ஆரம்பிக்காதிருந்தாலும், அப்படிப்பட்ட யாதொரு மரக்கலத்துக்கு, சந்தர்ப்பத்துக்கேற்றபடி சரக்கைக் கரையில் இறக்குவதற்காகவும் கப்பலில் ஏற்றுவதற்காகவுமாவது, சரக்கைக் கரையில் இறக்குவதற்காகவாவது கப்பலில் ஏற்றுவதற்காகவாவது ஷை செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திரவாராவதி பக்கமாய் வரும்படி அப்போதைக்கப்போது உத்தரவு செய்யலாம். அந்தப்படி உத்தரவு செய்கையில், போர்டார்-குறித்த யாதொரு செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திர வாராவதியை உபயோகிப்பது விஷயமாய் ஷை மரக்கலத்தின் சௌகரியத்தையும் கப்பலில் சரக்கு ஏற்றுபவர்களின் சௌகரியத்தையும் கூடியமட்டில் கவனித்துச் செய்யவேண்டும்.

*வசதியிடம் போதுமானதாயிருந்தால், ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை முதலியவைகளை உபயோகிக்கும்படி சமுத்திரத்தில் செலலும் சகல மரக்கலங்களையும் நிர்ப்பந்திக்கலாமென்பது.*

34. ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரைகளும், மேட்டுவழிகளும், நிற்பதற்கான நிலைகளும், அணைகளும், சமுத்திரவாராவதிகளும், சாமான் கிடங்குகளும், *கொட்டகைகளும், உபகரணங்களும் மேலேகண்டபடி போதுமான அளவுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தால், போர்டார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் தொடர்ச்சியாய் மூன்று பிரசுரங்களிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டில் ஒரு பிரசுரத்திலும் உத்தரவு பிரசுரித்து அநத உத்தரவுமூலமாக, ரேவுக்குள் ஷை செய்கரைகள், மேட்டுவழிகள், நிற்பதற்கான நிலைகள், அணைகள், சமுத்திர வாராவதிகள் ஆகிய இவைகள் தவிர மற்ற இடங்களிலே, சமுத்திரத்தில் செல்லும்படியான யாதொரு மரக்கலத்திலிருந்தாகிலும் அப்படிப்பட்ட யாதொரு மரக்கலத்திலாகிலும் எந்த சரக்கையும் கரையில் இறக்கக்கூடாதென்றோ அல்லது கப்பலில் ஏற்றக்கூடாதென்றோ கட்டளையிடலாம்; மேலும், ஷை போர்டார் - அம்மாதிரியாகவே அப்படிப்பட்ட யாதொரு உத்தரவைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது ரத்துசெய்யலாம்.

*ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை முதலியவைகள் பக்கமாய் வரக்கூடாதென்றாவது அவைகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்றாவது மரக்கலங்களுக்கு உத்தரவுசெய்ய அதிகாரம்.*

35. இதுவிஷயமாய் போர்டாரால் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரானவர் - அவசரமான சந்தர்ப்பங்களிலாவது தமக்குப் போதுமானதாகத் தோற்றும் யாதொரு காரணத்தைக்கொண்டாவது எழுத்துமூலமாய் நோடிஸ் கொடுத்து, போர்டாருக்குச் சொந்தமான யாதொரு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திர வாராவதியின் பக்கமாக யாதொரு மரக்கலத்தைக் கொண்டுவரக்கூடாதென்றாகிலும், அதிலிருந்து யாதொரு மரக்கலத்தை அப்புறப்படுத்தவேண்டுமென்றாகிலும் அந்த மரக்கலத்தின் மாஸ்டருக்காயினும் சொந்தக்காரருக்காயினும் உத்தரவு செய்யலாம்;

மேலும், அந்த நோடிஸின்படி நடக்காவிட்டால், போர்டார் - ஷை மரக்கலமானது அப்படிப்பட்ட செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திர வாராவதியில் இருக்கிற இருபத்திநான்குமணி நேரம்கொண்ட ஒவ்வொரு தினத்துக்கும் அல்லது அப்படிப்பட்ட தினத்தின் பாகத்துக்கும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற தொகையை ஷை மரக்கலத்தின் விஷயமாய்க் கட்டணமாக விதித்து வாங்கலாம் :

ஆனால், அப்புறப்படுத்தும்படி உத்தரவு செய்யப்பட்ட யாதொரு மரக்கலத்தின் விஷயத்திலே, மேலேகண்டபடிக்கான நோடிஸானது அந்த மரக்கலத்தின் மாஸ்டருக்காகிலும் சொந்தக்காரருக்காகிலும் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பன்னிரண்டு மணிநேரம் கழிவாகிறவரையில் ஷை கட்டணம் விதிக்க ஆரம்பிக்கக்கூடாது.

*ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை முதலியவைகளை உபயோகிக்கக் கடமைப்பட்டிருப்பதினின்றும் நிவாரணை செய்யவும்,*

36. 33-வது, 34-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மென்டார் - போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் விளம்பரம் பிரசுரித்து அந்த விளம்பரமூலமாக, ரேவில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய பாகத்திலும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய விதமாகவும் காலம்வரையிலும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய தொகைகளைச் செலுத்துவதற்கும் திட்டங்களுக்கும் உட்பட்டும், குறிப்பிட்ட சில மரக்கலங்களாவது சில வகுப்புகளைச் சேர்ந்த மரக்கலங்களாவது சரக்கையாகிலும் குறிப்பிட்ட சில சரக்குகளையாகிலும் சில வகைகளைச் சேர்ந்த சரக்குகளையாகிலும் கப்பலிலிருந்து இறக்குவதற்கோ கப்பலில் ஏற்றுவதற்கோ அப்போதைக்கப்போது அனுமதி கொடுக்கலாம் ; மேலும், அப்படிப்பட்ட பிரிவுகளினின்றும் மற்றப்படி நிவாரணையும் செய்து கொடுக்கலாம்.

அன்றியும், பிரதேச கவர்ன்மென்டார்-அம்மாதிரியே விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை ரத்துசெய்யலாம் அல்லது திருத்தலாம்.

*கவர்ன்மென்டைச் சேர்ந்த மரக்கலங்களை சிலாக்கியமாய் பாவிக்கும்படி கேட்கவும் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.*

அல்லாமலும், எந்தக் காலத்திலாகிலும் பிரதேச கவர்ன்மென்டார் - மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களையாவது இந்தியா கவர்ன்மென்டாரையாவது சேர்ந்தவைகளாயிருக்கிற அல்லது அவர்களுடைய ஊழியத்திலிருக்கிற யாதொரு மரக்கலமானது அந்தக் காலத்தில் ரேவிலிருக்கிற மற்ற மரக்கலங்கள் எல்லாவற்றிலும் முற்பட்டு, போர்டாரைச் சேர்ந்த யாதொரு ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான செய்கரை, மேட்டுவழி, நிற்பதற்கான நிலை, அணை அல்லது சமுத்திரவாராவதி பக்கமாய் வருவதற்கு அனுமதிகொடுக்க வேண்டுமென்று கேட்கலாம் ; அதன்மேல், போர்டார் - அவ்விதம் கேட்கப்பட்டபடியே அனுமதி கொடுக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

*வேலைகளை ஸர்வேபண்ணும்படியாவது பரிசோதனை பண்ணும்படியாவது உத்தரவுசெய்ய அதிகாரம்.*

37. போர்டாருடைய எந்த கட்டுவேலைகளையாவது அவைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட நிலேசனத்தையாவது அவ்விடத்திற்குப் போய் ஸர்வே செய்யும்படியாகிலும் பரிசோதனைபண்ணும்படியாகிலும் பிரதேச கவர்ன்மென்டார் எப்போதாவது உத்தரவுபண்ணலாம். அந்தப்படி ஸர்வே செய்வதற்காகவும் பரிசோதனை செய்வதற்காகவும் பிடிக்கிற செலவை போர்டார் ஏற்றுக்கொண்டு அதைத் தங்களுடைய ஜெனரல் பண்ட் என்னும் நிதியிலிருந்து செலுத்தவேண்டும்.

*போர்டார் செலவில் வேலைகளைப் புதுப்பிக்க அல்லது பூர்த்திசெய்யப் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.*

38. எந்தக் காலத்திலாகிலும் போர்டார் - தங்களால நிருமிக்கப்பட்டதாக அல்லது ஏற்படுத்தப்பட்டதாகவாவது தங்களுக்குச் சங்கிரமித்ததாகவாவதுள்ள யாதொரு வேலையையாகிலும் உபகாரணத்தையாகிலும் மராமத்துசெய்யாமல் பழுதாய்ப் போகவொட்டினாலும்,

தங்களால் ஆரம்பிக்கப்பட்டாவது பிரதேச கவர்ன்மென்டாரால் ஜாரிசெய்யப்பட்ட யாதொரு மதிப்புக்கணக்கில் சேர்ந்தாவதிருக்கிற யாதொரு வேலையை நியாயமான காலத்திற்குள் செய்துமுடிக்காவிட்டாலும்,

பிரதேச கவர்ன்மென்டாருக்கு இந்த ஆக்டிலுள்ள காரியங்களின்பொருட்டு அவசியமானதென்று தோற்றுகிற யாதொரு கட்டுவேலை அல்லது மராமத்தை சீராய்ச்செய்து முடிக்கவோ யாதொரு உபகாரணத்தை ஏற்படுத்தவோ எழுத்துமூலமாய்க் கிரமமான நோடிஸ் பெற்றுக்கொண்டபின்பு ஆரம்பிக்காவிட்டாலும்,

பிரதேச கவர்ன்மென்டார் - அப்படிப்பட்ட வேலையைப் புதுப்பிக்கும்படி செய்யலாம் அலலது பூர்த்திசெய்விக்கலாம் அல்லது நிறைவேற்றிவைக்கலாம், அல்லது அந்த மராமத்தைச் செய்து முடிக்கலாம், அல்லது அந்த உபகாரணத்தை ஏற்படுத்துவிக்கலாம் ; அந்தப்படி புதிப்பிப்பதற்காவது பூர்த்திசெய்வதற்காவது கட்டுவதற்காவது ஏற்படுத்துவதற்கா

வது பிடிக்கும் செலவை போர்டார் செலுத்தவேண்டும்; அதைச் செலுத்துவதற்கு நியாயமான காலத்திற்குள்ளாக போர்டார் ஏற்பாடுசெய்யாவிட்டால், அந்தத் தொகையானது பிரதேச அதிகாரிகள் கடன்வாங்குவதைக்குறித்த 1914-ம் வருஷத்திய ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற விதமாய் வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

1914-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

போர்டார் ஊழியங்கள் செய்வது.

39. (1) போர்டார் தங்களுக்குடைய அதிகாரங்களை அனுசரித்து அடியிற்கண்ட ஊழியங்களுக்குக்காக நியாயமான சகல சௌகரியங்களையும் ஏற்படுத்திக்கொடுப்பது மாத்திரமல்லாமல், அந்த ஊழியங்களைச் செய்ய ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு:—

(a) ரேவிலுள்ள மரக்கலங்களுக்கும் போர்டாருடைய சுவாதீனத்திலிருக்கிற ஏற்றிறக்குமதிச் செய்கரைகள் - சமுத்திரவாராவதிகள் - மேட்டுவழிகள் அல்லது டாக்குகளுக்கும் மத்தியிலே பிரயாணிகளையும் சரக்குகளையும் கரையில் இறக்குவது, கப்பலில் ஏற்றுவது அல்லது ஒரு கப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்குக் கொண்டுபோவது;

(b) போர்டாருடைய வளவுக்குள் கொண்டுவரப்பட்ட சரக்குகளை வரப்பற்றிக்கொள்ளுவது, அப்புறப்படுத்துவது, இன்னொரிடத்துக்கு மாற்றுவது, கொண்டுபோவது, சேர்த்துவைப்பது அல்லது ஒப்புவிப்பது;

(c) என்ன நிர்ப்பந்தங்களையும் திட்டங்களையும் விதிப்பது தகுதியென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றக்கூடுமோ அந்த நிர்ப்பந்தங்களுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு ரேவின் எல்லைகளுக்குள்ளே பிரயாணிகளை ரெயில் மூலமாகவாவது ட்ராம்வே மூலமாகவாவது மற்றப்படியாவது ஏற்றிக்கொண்டுபோவது;

(d) ரேவிலுள்ள மரக்கலங்களிலிருந்து சமீபத்திலுள்ள ரெயில்வேக்கள் மூலமாக கொண்டுபோக உத்தேசிக்கப்பட்டிருக்கிற அல்லது சமீபத்திலுள்ள ரெயில்வேக்கள் மூலமாக ரேவிலுள்ள மரக்கலங்களுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கிற சரக்குகளை, 1890-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டின்படிக்கான யாதொரு ரெயில்வே கம்பெனியைப்போலாவது பரிபாலர்களைப்போலாவது வரப்பெற்றுக்கொள்வதும், ஒப்புவிப்பதும், அவைகளைக் கொண்டுபோவதும், புஸ்தகங்களில் பதிந்துகொண்டு ரசீது கொடுப்பதும் அனுப்புவதும்.

1890-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

(2) யாதொரு சொந்தக்காரர் கேட்டுக்கொள்ளும்பட்சத்திலே, போர்டார் - சரக்குகளின் விஷயத்தில், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b), (d) அடையாளமிட்ட பகுதிகளில் சொல்லியிருப்பவைகளும் தாங்கள் செய்ய ஏற்றுக்கொண்டிருப்பவைகளுமான சகல ஊழியங்களையுமாவது அவைகளில் எதையாவது செய்யவேண்டும்; ஆனால், 41-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியில் கண்டிருக்கிற நிபந்தனைகளின்படி தாங்கள் விட்டுவிட்டிருக்கும் எந்த ஊழியத்தையாகிலும் செய்ய போர்டார் கடமைப்பட்டவர்களாகமாட்டார்கள்.

(3) கேட்டுக்கொள்ளப்படுகிற பட்சத்திலே, போர்டார் - மேற்படி ஊழியத்தைச் செய்யும் காரியத்துக்காக சரக்குகளைத் தங்கள் வசத்தில் பெற்றுக்கொண்டு, பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நிர்ணயிக்கப்படும் நமூனாப்படியும் பொருள்படும்படியாகவும் ரசீது கொடுக்கவேண்டும்.

இந்தப் பிரிவின்படி எவையேனும் சரக்குகள் (போர்டாரின்) வசத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அவைகளுக்காக ரசீது கொடுக்கப்பட்டான பிறகு, அவைகளுக்கு நேரிடக்கூடிய யாதொரு நஷ்டம் அல்லது சேதத்தின் விஷயமாய், எந்த நபருக்கு ரசீது கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்காகிலும் எந்த மரக்கலத்திலிருந்து மேற்படி சரக்குகள் கரையில் இறக்கப்பட்டிருக்கின்றனவோ அல்லது எந்த மரக்கலத்திலிருந்து அவை இன்னொரு மரக்கலத்தில் ஏற்றப்பட்டிருக்கின்றனவோ அந்த மரக்கலத்தின் மாஸ்டர் அல்லது சொந்தக்காருக்காகிலும் பொறுப்பு எதுவும் ஏற்படமாட்டாது.

சரக்குகளுக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் முதலியவைகள் விஷயமாய் போர்டாரின் உத்தரவாதம்.

40. (1) தங்களுடைய வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கிற சரக்குகள் நஷ்டப்படுவது அல்லது சேதப்படுவது அல்லது கெட்டுப்போவது சம்பந்தமாய் போர்டாருக்குள்ள உத்தரவாதமானது - இந்த ஆக்டிற்கண்ட இதர நிபந்தனைகளுக்குட்பட்டும், ரெயில் மூலமாய்க் கொண்டுபோவதற்காக வரப்பற்றிக்கொள்ளப்பட்ட சரக்குகளின் விஷயத்திலே 1890-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டும், 1872-ம் வருஷத்திய இந்துதேசத்து காண்ட்ராக்ட் ஆக்ட் 152-வது பிரிவில் 'யாதொரு பிரத்தியேகமான காண்ட்ராக்ட் இல்லாவிட்டால்' என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு கடைசியாகச் சொன்ன ஆக்ட் 151, 152, 161-வது பிரிவுகளின்படி ஒரு (பெய்லீக்குள்ள) ஒப்படை வாங்குகிறவருக்குள்ள உத்தரவாதமாகும். ஆனால், 39-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் ரசீது போர்டாரால் கொடுக்கப்படுகிறவரையில், சரக்குகள் சொந்தக்காரரின் பொறுப்புக்கு உட்பட்டவையாக இருக்கும்.

1890-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.
1872-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

(2) போர்டார் - தங்களுடைய வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் சரக்குகளுக்கு நஷ்டம் அல்லது சேதம் ஏற்படும்பட்சத்தில், அந்த நஷ்டம் அல்லது சேதத்தைப்பற்றி

39-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சரக்குகளுக்காகக் கொடுக்கப்பட்ட ரசீதின் தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஷை நஷ்டம் அல்லது சேதத்துக்கு எவ்விதத்திலும் உத்தரவாதிகளாக மாட்டார்கள்.

பிரதேச கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு ஊழியங்களை விட்டுவிடுவது.

41. (1) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதிக்கும் பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கும் உட்பட்டு, போர்டார்—

(a) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களில் எதையாகிலும் செய்யும் விஷயத்தை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபரிடத்தில் விட்டுவிட்டு உடன்படிக்கை செய்துகொள்ளலாம்; அல்லது,

(b) 40-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவினால் போர்டாருக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பைக்காட்டிலும் அதிகமான அல்லது குறைவான பொறுப்பை ஏற்றுக்கொண்டு உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

(2) இந்தப் பிரிவின்படி செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு உடன்படிக்கையும் எழுத்துமூலமாய் இருக்கவேண்டியதுமல்லாமல், அதில் சம்பந்தப்பட்ட நபர்களாவது அவர்களுக்காக வேறே எவராவது கையெழுத்து போடவும் வேண்டும்.

(3) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அல்லது (b) அடையாளமிட்ட பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் யாதொரு ஊழியத்தைச் செய்யும் காரியம் தம்மிடத்தில் விடப்பட்டிருக்கும் எந்த நபரும் - அந்த ஊழியம் போர்டாரால் செய்யப்பட்டிருந்தால் 43-வது பிரிவின்படியாவது 44-வது பிரிவின்படியாவது 45-வது பிரிவின்படியாவது ஏற்படுத்தப்பட்ட வீத நிர்ணயத்தின் பிரகாரம் விதித்து வாங்கப்படத்தக்க தொகைக்கு அதிகமாய் எந்தத் தொகையாகிலும் அப்படிப்பட்ட ஊழியத்துக்காக விதிக்கவுங்கூடாது, வசூலிக்கவுங்கூடாது.

(4) அந்தப்படி விட்டுவிடப்பட்டிருக்கும் பாதகமில்லாமலே, போர்டார் - தங்களுடைய கட்டுவேலைகளையாவது உபகரணங்களையாவது உபயோகிப்பதற்காகவாகிலும், விட்டுவிடப்பட்டிருக்கும் ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட இதர ஊழியங்களுக்காகவாகிலும் 43-வது, 44-வது, 45-வது பிரிவுகளில் ஏற்படுத்தியிருக்கும் வீத நிர்ணயங்களின்படி கட்டணங்கள் விதித்து வாங்குவதனால் 40-வது பிரிவின்படி எவ்வித பொறுப்பும் ஏற்றுக்கொள்ளாமலே அந்தக் கட்டணங்கள் விதித்துவாங்கலாம்.

ஊழியங்கள் போர்டாரால் எந்த நபர்களிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்கின்றனவோ அந்த நபர்கள் ஊழியங்களைச் செய்வது.

42. (1) 39-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளின்படிக்கான எந்த ஊழியமாவது சகல ஊழியங்களாவது 41-வது பிரிவின்படி எந்த நபரிடத்தில் விட்டுவிடப்பட்டிருக்கிறதோ அல்லது விட்டுவிடப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட யாதொரு நபர் - சொந்தக்காரர் கேட்டுக்கொள்ளும் பட்சத்திலே, சரக்குகளின் விஷயத்தில் அந்தப்படி விட்டுவிட்டிருக்கும் ஊழியங்களில் எதையாகிலும் செய்யவேண்டும்; மேலும், அவர் - அது காரியத்துக்காக ஷை சரக்குகளைத் தம் வசத்தில் பெற்றுக்கொண்டு, பிரதேச கவர்ன்மென்டாரால் நிர்ணயிக்கப்படும் நமூனாப்படி ரசீது கொடுக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு நபருக்கு அவர் தம் வசத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் சரக்குகள் நஷ்டப்படுவது சேதப்படுவது அல்லது கெட்டுப்போவது விஷயமாய் ஏற்படும் உத்தரவாதமானது - இந்த ஆக்டிற்கண்ட இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டு,
1872-ம் வருஷத்து 9-வது ஆக்ட். 1872-ம் வருஷத்திய இந்துதேசத்து கான்ட்ராக்ட் ஆக்ட் 151, 152, 161-வது பிரிவுகளின்படி யாதொரு ஒப்படை வாங்குகிறவருக்குள்ள உத்தரவாதமாகும்.

## 6-ம் அத்தியாயம்.

### வீதவரிகள் விதிப்பதும் வசூல் செய்வதும்.

வீதவரிகளின் நிர்ணயம்.

43. போர்டார் - இதன்கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களில் எதுவாகிலும் என்ன வீதவரிகளின்படியும் என்ன திட்டங்களின்படியும் தங்களாலாவது 41-வது பிரிவின்படி யாதொரு ஊழியம் தம்மிடத்தில் விட்டுவிடப் பெற்றிருக்கும் யாதொரு நபராலாவது சிறிது மட்டில் தங்களாலும் சிறிதுமட்டில் அந்த நபராலுமாவது செய்யப்படவேண்டுமோ அந்த வீதவரிகள் கண்டுள்ள ஒரு வீத நிர்ணயத்தையும் அந்த திட்டங்கள் கண்டெழுதியிருக்கும் ஒரு ஸ்டேட்மென்டையும தயார் செய்யவேண்டும்:—

(a) ஹார்பரிலுள்ள மரக்கலங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஏற்றுவது;

(b) பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஷை மரக்கலங்களிலிருந்தாகிலும் அவைகளிலாகிலும், போர்டாரின் சுவாதீனத்திலாயினும் அனுபோகத்திலாயினுமிருக்கிற யாதொரு ஏற்றிறக்குமதிக்கான செய்கரை - மேட்டுவழி - சமுத்திரவாராவதி - டாக் - நிலம் அல்லது கட்டிடத்திலாகிலும் அதிலிருந்தாகிலும் ரேவின் எல்லைகளுக்குள் இருக்கும் யாதொரு இடத்திலாகிலும் இறக்குவதும் ஏற்றுவதும் ;

(c) அப்படிப்பட்ட யாதொரு இடத்தில் சரக்குகளை க்ரேன் என்னும் கருவியால் தூக்குவது அல்லது ஆள்கள் மூலமாய்க் கொண்டுபோவது ;

(d) அப்படிப்பட்ட யாதொரு இடத்திலே சரக்குகளைச் செய்கரையில் ஏற்றிறக்குமதி பண்ணுவது, கிடங்கில் சேர்த்துவைப்பது அல்லது நிர்ணயகாலத்துக்கு மேற்பட்டு அப்புறப்படுத்தாமல் வைத்துவைப்பது ;

(e) மரக்கலங்கள், பிரயாணிகள் அல்லது சரக்குகளின் விஷயத்தில் செய்யப்படும் வேறே யாதொரு ஊழியம்.

போர்டாருக்குச் சொந்தமாயிருக்கும் சொத்தை உபயோகிப்பதற்காக வீதவரிகளின் நிர்ணயமும் திட்டங்களைக்குறித்த ஸ்டேட்மெண்டும்.

44. போர்டாருக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது அவர்களுடைய சுவாதீனத்திலாவது அனுபோகத்திலாவது இருக்கிற யாதொரு சொத்தையாகிலும் ரேவின் எல்லைகளுக்குள் இருக்கிற யாதொரு இடத்தையாகிலும் இதில் பின்னால் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்களுக்காக எந்த வீதவரிகளைச் செலுத்துவதன் மேலும் எந்த திட்டங்களின்படியும் உபயோகிக்கலாமோ அந்த வீத வரிகள் கண்டுள்ள ஒரு வீத நிர்ணயத்தையும் அந்த திட்டங்கள் கண்டெழுதியிருக்கும் ஒரு ஸ்டேட்மென்டையும்கூட போர்டார் தயார் செய்யவேண்டும் :—

(a) மரக்கலங்களாவது படகுகளாவது மேலேகண்ட எவையேனும் நங்கூரம் போடும் இடங்கள், ஏற்றிறக்குமதிக்கான செய்கரை, மேட்டுவழி, சமுத்திரவாராவதி, டாக், நிலம், கட்டிடங்கள் அல்லது இடங்களை நெருங்கிப்போவது அல்லது ஷை இடங்கள் முதலியவைகளிலாகிலும் அவற்றின் ஓரத்தில் நெடுகவாகிலும் தங்கியிருப்பது ;

(b) பிரயாணிகளையாவது சரக்குகளையாவது ஏற்றிக்கொண்டுபோகும் பிராணிகளாகிலும வண்டிகளாகிலும் மேலேகண்ட யாதொரு ஏற்றிறக்குமதிக்கான செய்கரை, மேட்டுவழி, சமுத்திரவாராவதி, டாக், நிலம், கட்டிடம் அல்லது இடத்திலாயினும் அதன்மேலாயினும் பிரவேசிப்பது அல்லது வாடகைக்கு ஓடுவது ;

(c) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்ய உத்தேசிக்கப்பட்ட சரக்குகளின் சொந்தக்காரர்களாவது ஸ்டீமர் ஏஜென்டுகளாவது நிலத்தையாகிலும் கொட்டகைகளையாகிலும் குத்தகைக்கு எடுத்துக்கொள்வது ;

(d) போர்டாருக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற எந்த நிலம், கட்டுவேலைகள் அல்லது உபகரணங்களையாகிலும் வேறே எவ்விதமாகவேனும உபயோகிப்பது.

ஊழியங்களை ஒன்றாய்க் கூட்டிச் செய்வதற்காக ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட வீதவரிகள்.

45. 43-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழியங்களை எவ்விதமாகவாகிலும் கூட்டிச்செய்வதற்காகவாவது, அப்படிப்பட்ட ஊழியம் அல்லது ஊழியங்களுடன்கூட 44-வது பிரிவில் குறிப்பிடப்பட்டபடி போர்டாருக்குச் சொந்தமாகவாயினும் அவர்களுடைய சுவாதீனத்திலாயினும் அனுபோகத்திலாயினும் இருக்கும் யாதொரு சொத்தை எவ்விதமாகவேனும் உபயோகித்துக்கொள்வதையோ உபயோகித்துக்கொள்வதற்கான அனுமதியையோ எப்போதாகிலும் சேர்த்துக்கொண்டால் அதற்காகவாவது ஒன்றாய்ச் சேர்த்து நிர்ணயிக்கப்பட்ட வீதவரிகளை ஏற்படுத்தலாம்.

அப்படிப்பட்ட வீத நிர்ணயங்கள் கவர்ன்மென்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெறுவது.

46. (1) 43-வது பிரிவின்படியாவது 44-வது பிரிவின்படியாவது 45-வது பிரிவின்படியாவது போர்டாரால் ஏற்படுத்தப்படும் பிரதி வீத நிர்ணயத்தையும் திட்டங்களைக் குறித்த பிரதி ஸ்டேட்மென்டையும் அனுமதிக்காகப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும் ; மேலும், அது அந்தப்படி அனுமதிபெற்று போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரம் செய்யப்பட்டால் சட்டத்தைப் போலவே செலாவணியாகும் ; அந்த மாதிரியாகவே அனுமதி பெறுவதற்கும் பிரசுரஞ்செய்வதற்குமுட்பட்டு, அதை போர்டார் அப்போதைக்கப்போது திருத்தலாம் அல்லது அதனுடன் யாதொன்றைச் சேர்க்கலாம்.

விசேஷ சந்தர்ப்பங்களில் வீதவரிகளைத் தள்ளிவிடுவது.

(2) இந்தப் பிரிவின்படி செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு வீத நிர்ணயத்தின் பிரகாரம் விதித்து வாங்கத்தக்க வீதவரிகள் முழுவதையுமாவது அவைகளில் யாதொரு பாகத்தையாவது, யாதொரு கட்டணம் முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது, போர்டார் பிரதேச கவர்ன்மென்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு விசேஷ சந்தர்ப்பங்களில் தள்ளிவிடலாம். மேலும், தாங்களாகவே போர்டார் - தங்களுடைய பில்லுகளில் செய்திருக்கும் தப்பிதங்களைத் திருத்த

லாம், அந்த பில்லுகளில் கொடுக்கவேண்டியதாய் எழுதியிருக்கும் ஜாஸ்தி கட்டணங்களைத் தள்ளிவிடலாம்; அல்லாமலும், ஒவ்வொரு விஷயத்திலும் 200 ரூபாய் வரையிலே வசூலிக்கமுடியாத தொகைகளைக் கணக்கிலிருந்து அடித்துவிடலாம்.

உச்ச வீதவரிகளையும் அதம வீதவரிகளையும் நிஷ்கரிஷை செய்ய அதிகாரம்.

(3) 43-வது பிரிவினாலாவது 44-வது பிரிவினாலாவது 45-வது பிரிவினாலாவது கொடுக்கப்பட்ட அதிகாரங்களின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு வீத நிர்ணயத்திற்கண்ட எந்த அம்சத்தின் விஷயமாகவாவது போர்டார் - பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு உச்சவீதவரிகளையும் அதமவீதவரிகளையும் நிர்ணயிக்கலாம்; மேலும், அவர்கள் - அந்தப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் உச்சவீதவரிக்கு மேற்படாமலும் அதம வீதவரிக்குக் குறையாமலும் எந்தக் கட்டணங்களையாவது வசூல் செய்யலாம்.

ஜாஸ்தியாக வாங்கப்பட்ட கட்டணங்களை வாபஸ் செய்வது.

47. ஜாஸ்தியாக வாங்கப்பட்டிருக்கும் கட்டணத்தை வாபஸ்செய்யும்படியாக யாதொரு நபர் தாமாகவேயாகிலும் அவருடைய சார்பில் இன்னொருவராகிலும் தொகை செலுத்தப்பட்ட தேதிமுதல் ஆறு மாத காலத்துக்குள்ளாக போர்டாரிடத்தில் எழுத்துமூலமாய் தாவா செய்திருந்தாலொழிய, மேலேகண்டபடி வாபஸ்பெற அந்த நபர் அர்ஹராகமாட்டார்.

வரும்படிக் குறைவு சரிக்கட்டிப்போகும்படி வீதவரிகளை அதிகப்படுத்த அதிகாரம்.

48. (1) யாதொரு வருஷத்திய மதிப்புக்கணக்கு தயாரானதன்மேல், அந்த வருஷத்தில் போர்டாருக்கு இவ்வளவு வரும்படி கிடைக்குமென்று மதிப்பேற்படுத்தப்பட்ட தொகையிலிருந்து அந்த வருஷத்திற்கு இவ்வளவு செலவாகுமென்று மதிப்பேற்படுத்தப்பட்ட தொகையைக்கழித்து நின்ற தொகை - ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்காவது கடன்கொடுத்த வேறே எந்த நபருக்காவது அந்த வருஷத்தில் போர்டாரால் செலுத்தப்படத்தக்கதாகிற வட்டித்தொகையையும், 74-வது பிரிவின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு கடன்தீர்க்கும் நிதியையும், 66-வது பிரிவின்படிக்கான யாதொரு ஷரத்தை அனுசரித்து எந்தத் தொகையை மீண்டும் செலுத்தவேண்டியிருக்கிறதோ அந்தத் தொகையையும் செலுத்துவதற்குப் போதாதென்று தோற்றினாலும்;

யாதொரு வருஷம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் எப்போதாவது, அந்த வருஷத்தில் அப்போது சென்றபாகத்திய வரும்படித்தொகையிலிருந்தும், அந்த வருஷத்தில் மிகுதிநிற்கிற பாகத்திற்கு இவ்வளவு வரும்படி கிடைக்குமென்று மதிப்பேற்படுத்தப்பட்ட தொகையிலிருந்தும், அப்படி சென்ற பாகத்திய வாஸ்தவமான செலவுத் தொகையையும் அப்படி மிகுதிநிற்கிறபாகத்திற்கு இவ்வளவு செலவு பிடிக்குமென்று மதிப்பேற்படுத்தப்பட்ட தொகையையும் கழித்து நின்றதொகை மேலே கண்ட வட்டியையும் கடன் தீர்க்கும் நிதியையும் பாக்கித் தொகையையும் செலுத்துவதற்குப் போதாதென்று தோற்றினாலும்;

போர்டார்-மேற்படி வட்டியையும் கடன்தீர்க்கும் நிதியையும் பாக்கித் தொகையையும் பூர்த்தியாய்ச் செலுத்துவதற்கு எவ்வளவு தொகை வேண்டியதோ அவ்வளவுக்கு அந்த வருஷத்திய மதிப்பேற்படுத்தப்பட்ட வரும்படி கூடுமானமட்டில் போதுமானதாயிருக்கும்படி, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிற வீதவரிகளை அதிகப்படுத்தலாம்; அப்படி அதிகப்படுத்தவேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடுகிற பட்சத்தில் அவர்கள் அப்படியே செய்யவேண்டும்.

(2) அப்படி அதிகப்படுத்தப்பட்ட வீதவரிகள் போர்டாரால் நிஷ்கரிஷை செய்து பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அனுப்பப்படவேண்டும்; பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டால், அவை போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்படும்; அப்படி பிரசுரஞ் செய்யப்பட்ட தேதி முதற்கொண்டு ஒரு மாதம் கழிந்தபின்பு அந்த வீதவரிகள் விதிக்கப்படத்தக்கவைகளாவதுமல்லாமல், பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியின்மேல் போர்டாரால் மாற்றப்படுகிறவரையில் அப்படியே விதித்துக்கொண்டு வரப்படுபவைகளுமாகும்.

போர்டார் வீதவரிகளை அதிகப்படுத்தத் தவறுகிற பட்சத்தில் பிரதேச கவர்ன்மெண்டார் அந்தப்படி செய்ய அதிகாரம்.

49. பிரதேச கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து அப்படிப்பட்ட யாதொரு கட்டளையை அக்கிராசனாதிபதியானவர் பெற்றுக்கொண்டபிறகு பதினைந்து நாள் வரையில் போர்டார் அப்படி அதிகப்படுத்தப்பட்ட வீதவரிகளைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்துக்காகத் தெரிவித்துக்கொள்ள அசட்டைபண்ணினாலும் நிராகரித்தாலும், பிரதேச கவர்ன்மெண்டார் போர்ட் ஸேய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரஞ்செய்து, தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அந்த வீதவரிகளை அதிகப்படுத்தலாம்; அந்த விளம்பரமானது-அதிற்கண்டபடியாகவே ஒரு நூதன வீதவரிநிர்ணயம் 43-வது பிரிவின்படியாவது, 44-வது பிரிவின்படியாவது, 45-வது

பிரிவின்படியாவது கிரமமாய் ஏற்படுத்தப்பட்டும் 46-வது பிரிவின்படி அங்கீகரிக்கப்பட்டும் பிரசுரஞ்செய்யப்பட்டும் இருந்தாற்போலவே செலாவணியாகவேண்டும்.

அனுமதியில்லாமல் வீதவரிகளை போர்டார் குத்தகைக்கு விடக்கூடாதென்பது.

50. வீதவரிகளை விதிக்க இந்த ஆக்டின்படி தங்களுக்குச் சங்கிரமித்திருக்கிற யாதொரு சுதந்தரத்தை போர்டார்-பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியில்லாமல் குத்தகையாவது இஜாராவாவது விடக்கூடாது, விற்பனையாவது பராதீனமாவது பண்ணக்கூடாது.

அபராதங்களையும் தண்டத்தொகைகளையும் போர்டாரிடத்தில் செலுத்துவது.

51. இந்த ஆக்டின்படி வசூல் செய்யப்பட்ட சகல அபராதங்களையும் தண்டத்தொகைகளையும் போர்டாரிடத்தில் செலுத்தவேண்டும்.

தூத்துக்குடி ரேவு நிதியில் மிகுதியாயிருக்கும் தொகையை போர்டாருக்குச் செலுத்துவது.

52. தூத்துக்குடி ரேவுக்காக ரேவுநிதி ஏதாகிலும் ஏற்படுத்தப்படுமானல் அந்த ரேவு நிதிக்கணக்கில் 1908-ம்ஹூத்திய இந்துதேசத்து ரேவு ஆக்டின்படி வரவுவைக்கப்பட்ட தொகைகளிலிருந்து சட்டப்படி மேற்படி கணக்கின் கீழ் செலவழிக்கப்படத்தகுந்த சகலதொகைகளையும் கொடுத்து மிகுதியாய் நிற்கிற தொகை முழுவதையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது இந்த ஆக்டின் காரியங்களுக்காக போர்டாருக்குச் செலுத்தவேண்டுமென்று பிரதேச கவர்ன்மெண்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்தில் எந்த காலத்திலாகிலும் உத்தரவு செய்யலாம். 1908-ம்ஹூத்து 15-வது ஆக்ட்.

சரக்குக்களுக்கு வீதவரிகள் செலுத்த வேண்டிய காலம்.

53. இறக்கவேண்டிய சரக்குகளுக்காகச் செலுத்தவேண்டிய வீதவரிகள் அந்த சரக்குகள் இறக்கப்பட்டவுடனே செலுத்தப்படத்தக்கவைகளாகும்; போர்டாருடைய வளவிலிருந்துகொண்டு போகவேண்டியவைகளாகவாவது ஏற்றுமதியாவதற்குக் கப்பலில் ஏற்றவேண்டியவைகளாகவாவது ஒருகப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்கு ஏற்றவேண்டியவைகளாகவாவதிருக்கிறசரக்குகளுக்காகச்செலுத்தவேண்டிய வீதவரிகள் அந்த சரக்குகளைக் கொண்டுபோவதற்கு முன்னேயாகிலும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னேயாகிலும் ஒரு கப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்கு ஏற்றுவதற்கு முன்னேயாகிலும் செலுத்தப்படத்தக்கவைகளாகும்.

வீதவரி நிமித்தம் பாத்தியதை.

54. இந்த ஆக்டின்படி யாதொரு சரக்கின்விஷயமாய் வாங்கப்படத்தக்க சகல வீதவரித் தொகைக்காகவும், எவையேனும் கட்டிடங்கள், (கட்டிடங்களின், அடிப்பரப்புகள், (சாக்குகளை) அடுக்கிவைப்பதற்கான விஸ்தீர்ணங்கள் அல்லது இதர வளவுகளின் மேலாவது அவைகளிலாவது எந்த சரக்குகளாகிலும் வைக்கப்பட்டிருக்கக் கூடுமானல் அந்தக் கட்டிடங்கள் முதலியவைகள் விஷயமாய் போர்டாருக்குச் சேரவேண்டிய வாடகைக்காகவும் போர்டார் அந்த சரக்குக்கு பாத்தியதையுடையவர்களாவார்கள்; அவர்கள் அப்டிப்பட்ட வீதவரி பூர்த்தியாய்ச் செலுத்தப்படுகிறவரையில் அந்தசரக்கைக் கைப்பற்றி மறியல் செய்து வைக்கலாம்.

போர்டாருடைய பாத்தியதையானது இதர பாத்தியதைகளுக்கும் தாவாக்களுக்கும் முற்பட்டதாகுமென்பது.

55. அப்படிப்பட்ட பாத்தியதையானது - கப்பலில் சேதம் நேரிட்டால் அதை சரக்கேற்றினவர்கள் பொதுவில் ஒத்துக்கொடுப்பதாகிய ஜெனரல் ஆவரேஜ் என்பதற்காகவும், கேழ்வினிமித்தமாகவும் இதர கட்டணங்களினிமித்தமாகவும் மேற்படி சரக்குகள் விஷயமாகக் கப்பலின் சொந்தக்காரருக்கு பாத்தியதையிருந்து அது 56-வது பிரிவில் ஏற்படுத்தப்பட்ட விதமாய்ப் பாதுகாக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட பாத்தியதைக்காகவும், ப்ரைமேஜ் என்கிற கட்டணத்திற்காகவும், மஹாராஜ சக்கரவர்த்தி அவர்களுக்காவது ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்காவது செலுத்தப்படத்தக்க தொகைக்காகவும் தவிர மற்றப்படியுள்ள எல்லா பாத்தியதைகளுக்கும் தாவாக்களுக்கும் முற்பட்டதாகும்.

கப்பற்கேழ்வைப் பற்றின பாத்தியதை சரக்குகள் இறக்கப்பட்ட பின்பு பாதுகாக்கப்படுவது.

56. யாதொரு மரக்கலத்தின் மாஸ்டராவது சொந்தக்காரராவது அவருடைய ஏஜெண்டாவது - போர்டாருடைய சுவாதீனத்திலிருக்கிற யாதொரு டாக் - ஏற்றிறக்குமதிக்கான செய்கரை - மேட்டுவழி - நிற்பதற்கான நிலை - அணை அல்லது சமுத்திர வாராவதியில் அப்படிப்பட்ட மரக்கலத்திலிருந்து யாதொரு சரக்கை இறக்கும்போதாகிலும் இறக்குவதற்கு முன்னேயாகிலும், போர்டாருக்கு எழுத்து மூலமாக அறிக்கைசெய்து, அப்படிப்பட்ட சரக்குகள் அந்த அறிக்கையில் சொல்லப்பட்ட தொகைக்கு-கப்பற் சொந்தக்காரருக்குச்செலுத்தப்படத்தக்க கேழ்வு அல்லது கரையிலிறக்குவதற்கான கட்டணங்களுட்பட வேறே கட்டணங்களினிமித்தம் பாத்தியதைக்குட்பட்டிருக்கவேண்டியதென்று தெரிவித்தால், அப்படிப்பட்ட சரக்குகள் அந்த தொகைக்காக அப்படியே பாத்தியதைக்குட்பட்டவைகளாயிருக்கும்.

பாத்தியதை அற்றுப் போகிறவரையில் அப்படிப்பட்ட சரக்குகளை நிறுத்தி வைப்பது.

57. இதில் பின்னல் சொல்லப்படுகிற விதமாய் அப்படிப்பட்ட பாத்தியதை அற்றுப் போகிறவரையில், நஷ்டத்துக்கும் செலவுக்கும் அந்த சரக்குகளின் சொந்தக்காரர்களே உள்ளாகத்தக்கதாய் அவைகளை போர்டார் வசத்திலாவது கஸ்டம் தீர்வை பிரதான உத்தியோகஸ்தருடைய சம்மதியின்மேல் கஸ்டம்ஸ் ஏற்றிறக்குமதிக்கான பொது செய்கரைகளிலும் பொது சாமான் கிடங்குகளிலுமாவது நிறுத்திவைக்கவேண்டும்; அந்த சரக்குகள் அந்தப்படி நிறுத்திவைக்கப்படுகிற காலத்திற்குக் கிடங்குவாடகை அல்லதுசேர்த்துவைப்பதற்கான வாடகை அந்த சரக்குக்குச் சுதந்தரமுள்ளவரால் செலுத்தப்படத்தக்கதாகும்.

கேழ்வுக்காகக் கப்பல் சொந்தக்காரருக்குள்ள பாத்தியதை அற்றுப்போவது.

58. எவ்வளவு தொகைக்காக அப்படிப்பட்ட பாத்தியதை ஏற்பட்டிருக்கிறதோ அந்தத் தொகை வரப்பெற்றுக்கொள்ளப்பட்டதென்றாவது அந்தத் தொகையைப்பற்றின பாத்தியதை அற்றுப்போய்விட்டதென்றாவது பொருள்படுவதாய், யாரால் அல்லது யார்பட்சத்தில் மேற்படி அறிக்கைசெய்யப்பட்டிருக்கிறதோ அந்தநபரால் எழுதிக்கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜானது இதுவிஷயத்தில் போர்டாரால் நியமிக்கப்படுகிற யாதொரு உத்தியோகஸ்தருக்குக் காட்டப்படுவதன்மேல், போர்டார்-அப்படிப்பட்ட பாத்தியதை விஷயத்தை யோசிக்காமலே அந்த சரக்குகளைக் கொண்டு போகவொட்டலாம்; ஆனால், போர்டார் - அப்படிப்பட்ட தஸ்தவேஜானது உண்மையானதுதானா வென்பதைக்குறித்து நியாயமானபடி கவனித்திருக்கவேண்டும்.

வீதவரிகள் அல்லது வாடகை செலுத்தப்படாமலிருந்தாலும் கேழ்வுக்காகவுள்ள பாத்தியதை அற்றுப்போகாமலிருந்தாலும் இரண்டு மாதம் கழிந்த பின்பு சரக்குகளைவிற்பனை செய்வது.

59. (a) எவையேனும் சரக்குகள் விஷயமாய் போர்டாருக்குச் செலுத்தப்படத்தக்க வீத வரிகள் எதுவாகிலும் செலுத்தப்படாமலிருந்தாலும்,

(b) ஷை சரக்குகள் எந்த இடத்தின் மேலோ இடத்திலோ சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றனவோ அப்படிப்பட்ட யாதொரு இடத்தின் விஷயமாய் 54-வது பிரிவில் கண்டிருக்கும் யாதொரு வாடகை செலுத்தப்படாமலிருந்தாலும்,

(c) கப்பற் கேழ்வு அல்லது வேறே கட்டணங்களின் நிமித்தம் யாதொரு கப்பலின் சொந்தக்காரருக்குள்ள எந்தபாத்தியதையைப்பற்றியாகிலும் அறிக்கை செய்யப்பட்டிருந்தும், அது சரிச் சொல்லப்படாமலிருந்து, அந்தக் கப்பற் கேழ்வு அல்லது இதர கட்டணங்களின் நிமித்தம் அப்படிப்பட்ட பாத்தியதை உண்டென்று சொல்லுகிற நபர் விற்பனை செய்யவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டிருந்தாலும்,

அந்த சரக்குகள் போர்டாரின் வசத்தில் வந்த காலமுதல் இரண்டு மாதம் கழிந்த பிறகாவது, அழிந்துபோகத்தக்க சரக்குகளாயிருந்தால் 24 மணி நேரத்துக்குக் குறையாமல் போர்டாருக்குத் தகுதியாகத் தோற்றும் இன்னும் குறைவான கால அளவு கழிந்த பிறகாவது, அந்த சரக்குகளில் அவசியமாயுள்ள பாகத்தை பஹிரங்கமான ஏல மூலமாய் போர்டார் விற்பனை செய்யலாம்.

விற்பனையைக் குறித்து நோடிஸ்,

60. அந்தப்பிரகாரம் விற்பனைசெய்வதற்குமுன்னமே, திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டில் விளம்பர மூலமாய் அந்த விற்பனையைக் குறித்துப் பத்துநாளைய நோடிஸ் கொடுக்கவேண்டும்; ஆனால், அந்த சரக்கு அழிந்து போகும் தன்மையுள்ளதாயிருந்து அதனாலே அதை உடனே விற்பனைசெய்வது அவசியமென்றாகிலும் யுக்தமென்றாகிலும் போர்டார் அபிப்பிராயப்படுகிற பட்சத்தில், அந்த விஷயத்தின் அவசரத்துக்குத் தக்கபடி எவ்வித நோடிஸ் கொடுப்பது சாத்தியமோ அவ்வித நோடிஸ் கொடுக்கவேண்டும்.

சொந்தக்காரருக்கு விற்பனை நோடிஸ்.

61. சரக்கின் சொந்தக்காரருடைய மேல்விலாசம் சரக்கு ஜாபிதாவிலாவது போர்டாருடைய வசத்தில் வந்திருக்கிற தஸ்தவேஜுகளில் எதிலாவது கண்டிருந்தாலும் வேறேவிதமாய்த் தெரியவந்தாலும், அந்த மேல்விலாசத்தில் கடிதத்தைச் சேர்ப்பித்தாவது தபாலில் அனுப்பியாவது சரக்கின் சொந்தக்காரருக்கு நோடிஸ் கொடுக்கவும் வேண்டும்; ஆனால், அந்த சரக்கை நல்ல எண்ணத்தோடு கிரயத்திற்குக் கொள்ளுகிறவருடைய சுதந்தரமானது இதில் முன்னமே சொல்லப்பட்ட நோடிஸ் அனுப்பப்படவில்லை யென்கிற காரணத்தினல் செலாவணியற்றதாகவுமாட்டாது, அப்படி கிரயத்திற்குக்கொள்ளுகிறவரெவரும் அப்படிப்பட்ட நோடிஸ் அனுப்பப்பட்டிருக்கிறதாவென்று விசாரணை பண்ணவேண்டியவருமாகார்.

விற்றுமுதலை இன்னது செய்வதென்பது.

62. (1) அப்படிப்பட்ட பிரதி விற்பனையினாலும் கிடைக்கிற தொகையை—

(a) விற்பனைக்காகப் பிடித்த தொகையைச் செலுத்துவதற்காகவும்,

(b) எந்த பாத்தியதைகளுக்கும் தாவாக்களுக்கும் போர்டாருக்குள்ள பாத்தியதை முற்படமாட்டாதென்று 55-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த பாத்தியதைகளையும் தாவாக்களையும் தீர்க்கவேண்டிய வரிசைக்கிரமமாகத் தீர்ப்பதற்காகவும்,

(c) சரக்கை இறக்கவாவது கொண்டுபோகவாவது சேர்த்துவைக்கவாவது சாமான் கிடங்கில் வைக்கவாவது சேரவேண்டிய வீதவரிகளையும் செலவுத் தொகைகளையும் அவைகளின் விஷயமாய் போர்டாருக்குச் சேரவேண்டிய மற்ற சகல கட்டணங்களையும் செலுத்துவதற்காகவும்,

உபயோகப்படுத்தவேண்டும்.

(2) மிகுதி ஏதாவதிருந்தால் அதை, சரக்கை இறக்குமதி செய்தவராவது அதற்குச் சொந்தக்காரராவது அதை ஒப்படைபெற்றவராவது விண்ணப்பஞ்செய்துகொள்ளுதன்மேல் அவருக்காகிலும் அவருடைய ஏஜென்டுகளுக்காகிலும் கொடுத்துவிடவேண்டும் : ஆனால், விற்பனை செய்யப்பட்ட தேதி முதல் ஒரு வருஷத்திற்குள்ளாக அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் அப்படி விண்ணப்பம் செய்துகொள்ளாததற்கு போர்டாருக்குத் திருபதியாகும்படி காரணம் தெரிவிக்கவேண்டும் ; அப்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்படாவிட்டாலும் காரணம் தெரிவிக்கப்படாவிட்டாலும், அந்த மிகுதிப் பணம் இந்த ஆக்டிலுள்ள காரியங்களின்பொருட்டு ட்ரஸ்ட் பணமாக போர்டாரால் வைத்துவைக்கப்படும்.

மரக்கலத்தை ஜப்திசெய்து வீதவரிகளையும் கட்டணங்களையும் வசூல் பண்ணுவது.

63. இந்த ஆக்டின்படிக்காவது அதை அனுசரித்துச் செய்யப்பட்ட எவையேனும் சகாயச்சட்டங்கள்-விதிகள் அல்லது உத்தரவுகளின்படிக்காவது எவ்வித வீதவரிகள் அல்லது தண்டத்தொகைகள் எதற்காகச் செலுத்தப்படத்தக்கவைகளாகுமோ அப்படிப்பட்ட யாதொரு மரக்கலத்தின் மாஸ்டர் கேட்கப்படும்போது அவைகளையாகிலும் அவைகளில் எவ்வளவையாகிலும் செலுத்த நிராகரித்தாலும் அசட்டைபண்ணினாலும், அப்படிப்பட்ட மரக்கலத்தையும் அதைச்சேர்ந்த பாய் - கயிறு - கப்பி முதலிய சாமான்களையுமாவது அவைகளின் யாதொரு பாகத்தையாவது தங்களுடைய சொந்த அதிகாரத்தின் மேல் போர்டார் ஜப்தி பண்ணுவதும் அல்லது கைப்பற்றுவதும் அந்தப்படி சேரவேண்டிய தொகை செலுத்தப்படுகிறவரையில் அவைகளை மறியலில் வைத்து வைப்பதும் சட்ட சம்மதமாகும் ;

மேற்படி வீதவரிகள் அல்லது தண்டத்தொகைகளிலாவது, ஜப்திபண்ணினது அல்லது கைப்பற்றினதற்காகப் பிடித்த செலவிலாவது, அவைகளை வைத்து வைப்பதற்காகப் பிடித்த செலவிலாவது எவ்வளவாகிலும் அப்படி ஜப்தி பண்ணின அல்லது கைப்பற்றின தேதி முதல் அடுத்த ஐந்து நாள்வரையிலும் செலுத்தப்படாமலிருந்தால், போர்டார்-அப்படி ஜப்திபண்ணின அல்லது கைப்பற்றின மரக்கலம் அல்லது வேறே வஸ்துவை விற்பனை செய்விக்கலாம் ; அந்த விற்றுமுதலைக்கொண்டு அப்படிப்பட்ட வீதவரிகள் அல்லது தண்டத்தொகைகளையும் விற்பனைக்காகப் பிடித்த செலவில் செலுத்தப்படாத பாகமுட்பட செலவுகளையும் செலுத்திவிட்டு, மிகுதி (ஏதாவதிருந்தால்) அதை அந்த மரக்கலத்தின் மாஸ்டர் கேட்கிறபட்சத்தில் அவருக்குக் கொடுத்துவிடவேண்டும்.

வீதவரிகள் செலுத்திய பிறகு போர்ட் (ரேவு) க்ளியரென்ஸ் (பயணசீட்டு) கொடுப்பது.

64. இந்த ஆக்டின்படிக்காவது அதை அனுசரித்துச்செய்யப்பட்ட எவையேனும் சகாயச் சட்டங்கள்-விதிகள் அல்லது உத்தரவுகளின்படிக்காவது விதிக்கப்படத்தக்க வீதவரிகள் அல்லது தண்டத்தொகைகள் விஷயமாய் யாதொரு மரக்கலத்தின் மேலாகிலும், அதன் நிமித்தம் அந்த மரக்கலத்தின் சொந்தக்காரர் அல்லது மாஸ்டர் மேலாகிலும், அப்படிப்பட்ட மரக்கலத்திலுள்ள எவ்வித சரக்குகளின்மேலாகிலும் அவைகளின் விஷயமாயாகிலும் இவ்வளவு தொகை பாக்கியிருக்கிறதென்று கண்டு போர்டார் அப்படிப்பட்ட மரக்கலத்துக்குப் போர்ட் (ரேவு) க்ளியரென்ஸ் (பயணச்சீட்டு) கொடுக்கவேண்டிய கவர்ன்மென்ட் ஆபிஸருக்கு நோடிஸ் கொடுக்கிறபட்சத்தில், அந்த ஆபிஸர் அப்படி விதிக்கப்படத்தக்க தொகை செலுத்தப்படுகிறவரையில் மேற்படி பயணச் சீட்டைக் கொடுக்கக்கூடாது.

வியாஜ்ஜிய மூலமாக ஏற்படும் மற்றொரு பரிகாரம்.

65. அடுத்த முந்திய பன்னிரண்டு பிரிவுகளிலும் 110, 111, 113-வது பிரிவுகளிலும் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, போர்டார் - யாதொரு வீதவரி - நஷ்டஈடு - செலவுத்தொகை - பட்டுபடி தொகை - இதையாவது, விற்பனை செய்கிற விஷயத்திலே விற்றுவந்த பணமானது போதாததாயிருந்தால் ஷை தொகைகளில் மிகுதியாய் நிற்கும் பாகத்தையாவது, இந்த ஆக்டின்படியாகிலும் இதை யனுசரித்துச் செய்யப்பட்ட யாதொரு சகாயச்சட்டத்தின்படியாகிலும் போர்டாருக்குச் செலுத்தத்தக்க அல்லது அவர்களால வசூலிக்கப்படத்தக்க யாதொரு தண்டத்தொகையையாவது அபராதத்தொகையையாவது வியாஜ்ஜிய மூலமாக வசூல்செய்யலாம்.

## 7-ம் அத்தியாயம்.

கடன்வாங்க போர்டாருக்குள்ள அதிகாரங்கள.

கடன் வாங்க அதிகாரம்.

66. (1) போர்டார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியையும் ஐந்து லக்ஷ ரூபாயக்குக் குறையாத கடன் தொகையின் விஷயத்திலே ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியையும் முன்னதாகப் பெற்றுக்கொண்டும் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் கிரமமாய் விளம்பரம் பிரசுரித்த பிறகும் இந்த ஆக்டின் காரியங்களுக்காக கடன் வாங்கலாம்.

(2) கடன் தொகைகளை, பஹிரங்கமாய்க் கடன் கொடுப்பவர்களிடமிருந்து போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களின்பேரில் வாங்கலாம், அல்லது பிரதேச கவர்ன்மென்டாரிடமிருந்தாவது இந்தியா கவர்ன்மென்டாரிடமிருந்தாவது பெற்றுக்கொள்ளலாம். சகல கடன்களைக்குறித்த ஷரத்துகளும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அங்கீகாரத்துக்கு உட்பட்டவைகளாகும்.

போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள்.

67. (1) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு போர்டார் - போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் இன்ன நமூனாப்படி வெளிவிடப்படவேண்டுமென்பதையும், இன்ன மாதிரியாகவும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் அவை ட்ரான்ஸ்பர் செய்யப்படலாமென்பதையும் நிர்ணயிக்கலாம்.

(2) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் மூலமாய்க் கிடைத்திருக்கும் பணத்தொகைகள் விஷயமாக வியாஜ்ஜியம் தொடருவதற்குள்ள சுதந்தரமானது - அந்தப் பத்திரங்களில் சில மற்றவைகளைக் காட்டிலும் முன்னிட்ட தேதியுள்ளவைகளென்கிற காரணத்தினாலே சிலாக்கியம் பெறுமல, அந்தந்த காலத்தில் அவைகளை வைத்துக்கொண்டிருப்பவர்களால் கொண்டாடப்படத்தக்கதாகும்.

1920-ம் ௵த்து 10-வது ஆக்ட்.

இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குப் பிரயோகப்படத்தக்கதாகுமென்பது.

68. 1920-ம் ௵த்திய இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் 4, 5, 8, 9, 10, 15-வது பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் - போர்டாரால் வெளிவிடப்படும் சகல பத்திரங்களுக்கும் அவசியமான மாறுதல்களுடன் பிரயோகப்படும் ; ஆனால், 9-வது பிரிவின் விஷயத்தில ‘ ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் ’ என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக ‘ பிரதேச கவர்ன்மென்டார் ’ என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டியதுமல்லாமல், 10-வது 15-வது பிரிவுகளின் விஷயத்திலே ‘ நிர்ணயிக்கப்பட்ட ’ என்னும் வார்த்தையானது ‘ பிரதேச கவர்ன்மென்டாராலாவது பிரதேச கவர்ன்மென்டாருடைய அனுமதியுடன் போர்டாராலாவது நிர்ணயிக்கப்பட்ட ’ என்று பொருள்படுவதாகக்கொள்ளவும் வேண்டும்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

69. (1) போர்டார் - அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவாவது அவைகளில் எதற்காவது நிபந்தனை எற்படுத்தும்பொருட்டு அப்போதைக்கப்போது விதிகள் செய்யலாம் ; அந்த விஷயங்கள் எவையென்றால் :—

(a) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களில் கையெழுத்துபோட அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபர் எவராகிலும் இருந்தால் அவர் இன்னாரென்பதும், போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குச் சம்பந்தப்பட்ட தஸ்தவேஜுகளில் கார்பொரேட் ஸீல் (சட்டப்படி எற்பட்டதென்பதைக் காட்டும் முத்திரை) இன்னவிதமாய் அழுத்தப்படவேண்டுமென்பதும் அந்த தஸ்தவேஜுகளில் இன்ன விதமாய் அத்தாட்சிக்கையெழுத்து போடப்படவேண்டுமென்பதும் ;

(b) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்கு வட்டி இன்ன மாதிரியாகக் கொடுக்கவேண்டுமென்பதும், வட்டி கொடுப்பதை இன்ன மாதிரியாய் ஒப்புக்கொள்ளவேண்டுமென்பதும் ;

(c) இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன மாதிரியாகவும் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்கள் புதுப்பிக்கப்படலாமென்பது ;

(d) அப்படிப்பட்ட பத்திரங்களுக்காகப் பின்னும் வட்டி கொடுக்கும்படி கேட்பதற்குமுன் இன்ன சந்தர்ப்பங்களில் அவை புதுப்பிக்கப்படவேண்டுமென்பது ;

(e) புதுப்பிக்கப்படுவதற்கும் மாற்றப்படுவதற்கும் ஒப்பிக்கப்படுகிற பத்திரங்களில் இன்ன நமூனாப்படி ரசீது எழுதவேண்டுமென்பது ;

(f) இரண்டாம் பிரதியான பத்திரங்களுக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் நபர்கள் இன்ன ருஜு காட்டவேண்டுமென்பது ;

1920-ம் ௵த்து 10-வது ஆக்ட்.

(g) போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களுக்குப் பிரயோகப்படுத்தப்பட்டபடி 1920-ம் ௵த்திய இந்துதேசத்துப் பத்திரங்களாக்ட் 10-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் விளம்பரத்தை, இன்ன நமூனாப்படியும் இன்ன மாதிரியாகவும் பிரசித்தம் செய்யவேண்டுமென்பதும், அந்தப் பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் ஜாபிதாவை இன்ன மாதிரியாய்ப் பிரசித்தம் செய்யவேண்டுமென்பதும் ;

(h) முழுவதுமாவது சிறிதுமட்டிலாவது தொலைந்துபோய்விட்டதென்ருகிலும் அழிந்துபோய்விட்டதென்ருகிலும் சொல்லப்படும் டிபென்சர் என்னும் கடன் பத்திரங்களுக்கு வட்டி கொடுக்கப்படவேண்டுமென்ருே இரண்டாம் பிரதியான டிபென்சர் என்னும் கடன் பத்திரங்கள் பிறப்பிக்கப்படவேண்டுமென்ருே விண்ணப்பம் செய்துகொள்ளும் யாதொரு நபர் அதனுல் பாதகம் உண்டாகாதபடி இன்ன வகையாகவும் இவ்வளவு தொகைக்கும் பாதுகாப்பு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்பது ;

(i) இன்ன திட்டங்களுக்குட்பட்டு போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களை மாற்றிக் கொள்ளலாமென்பது ;

(j) இன்ன தொகைகளுக்கு ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகள் பிறப்பிக்கப்படலாமென்பது ;

(k) பொதுவாய், இரண்டாம் பிரதியான புத்திரங்களையும் புதுப்பிக்கப்பட்ட பத்திரங்களையும் மாற்றப்பட்ட பத்திரங்களையும் கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களும் ;

(l) இரண்டாம் பிரதியான பத்திரங்களைப் பிறப்பிப்பது விஷயமாகவும் போர்ட் ட்ரஸ்ட் பத்திரங்களைப் புதுப்பிப்பது விஷயமாகவும் மாற்றுவது விஷயமாகவும் இன்ன கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமென்பது ;

(m) ஸ்டாக் ஸெர்டிபிகேட்டுகளைப் பிறப்பிப்பது விஷயமாய் இன்ன கடடணங்கள் விதித்து வாங்கப்படவேண்டுமென்பது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி விதிகள் செய்வதற்கான அதிகாரமானது அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டதாகும் :—

(i) விதிகளின் மசோதா ஒன்று போர்ட் ஸேய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் தொடர்ச்சியாக மூன்று பிரசுரங்களில் பிரசுரிக்கப்படவேண்டும்.

(ii) அது - அந்தப்படி பிரசுரிக்கப்பட்ட பிறகு பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படுகிற வரையிலும் அப்படிப்பட்ட அங்கீகாரமும் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தம் செய்யப்பட்டாகிறவரையிலும் செலாவணியாகமாட்டாது.

(iii) இந்த பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி பிரசுரிக்கப்பட்டிருக்கும் யாதொரு விதியை எந்தக் காலத்திலாகிலும் விளம்பரமூலமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டார் ரத்து செய்யலாம்.

இன்ன இடத்தில் கடன் வாங்கவேண்டுமென்பதும் இன்ன நாணயரூபமாகக் கடன் வாங்கவேண்டுமென்பதும்.

70. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பிரதேச கவர்ன்மெண்டார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் வேறே விதமாகக் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, போர்டார் வாங்கும் சகல கடன் தொகைகளும் இந்தியாவிலும் இந்தியாவில் வழங்கும் நாணய ரூபமாகவும் வாங்கப் படவேண்டும்.

கடனுக்காக ஈடு வைப்பது.

71. (a) யாதொரு கடனைச் செலுத்தும்பொருட்டுக் கடன்தீர்க்கும் நிதியாக போர்டாரால் பிரத்தியேகமாய் வைக்கப்பட்டிருக்கும் எவ்வித தொகைகள் நீங்கலாக, இப்போது போர்டார் பரமாயிருக்கும் அல்லது இனிமேல் போர்டார் பரமாகக்கூடிய சொத்தை ஈடாக வைத்தும்,

(b) இந்த ஆக்டின்படி விதித்து வாங்கத்தக்க சுங்கங்கள் - தீர்வைகள் - வீதவரிகள்- வாடகைகள் - கட்டணங்கள் ஆகிய இவைகளை ஈடாகவைத்தும்,

சகல தொகைகளையும் கடன் வாங்கலாம்.

போர்டாருக்குக் கொடுத்திருக்கும் கடன் தொகைகள் விஷயமாக ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்குள்ள பரிகாரங்கள்.

72. ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்கள் - போர்டாருக்கு அல்லது தூத்துக்குடி ரேவு கான்ஸர்வென்ஸி போர்டாருக்குக் கொடுத்திருக்கும் கடன் தொகைகள் விஷயமாக, டிபென்சர் ஹோல்டர் என்னும் கடன்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு என்ன பரிகாரங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதே பரிகாரங்கள் உடையவராவார் ; மேலும், கடன்பத்திரம் வைத்திருப்பவர்களை விட அவருக்கு அந்தக் கடன் தொகைகள் விஷயமாக எவ்விதமுந்திய பாத்தியதையாவது அதிக பாத்தியதையாவது இருப்பதாக எண்ணக்கூடாது.

செலுத்தவேண்டிய தேதிக்கு முன்னமேயே கடன் தொகைகளைச் செலுத்த அதிகாரம்.

73. யாதொரு கடன் தொகையின் அசல்விஷயத்திலே ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு இன்னும் பாக்கியாயிருக்கும் யாதொரு தொகையை மீண்டும் செலுத்துவதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட காலத்துக்கு முன்னே, அந்தத் தொகையை ஷை ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு மீண்டும் செலுத்தும் விஷயத்தில், போர்டாரைச் சேர்ந்த இதர கடன்-

பத்திரம் வைத்திருப்பவர்களின் ஈட்டுக்கு பாதகமுண்டாக்காமலே உபயோகிக்கக்கூடிய பதினாயிரம் ரூபாய்க்குக் குறையாத எந்த தொகையையாவது போர்டார் உபயோகிக்கலாம்.

அந்தப்படி யாதொரு தொகை மீண்டும் செலுத்தப்பட்டால், பிறகு செலுத்தப்படும் யாதொரு தவணைத் தொகையில் வட்டிக்காகச் செலுத்தவேண்டிய தொகையை, இன்னும் பாக்கியாயிருக்கும் அசலுக்குச் சேரவேண்டிய வட்டிக்குச் சரியாயிருக்கும் தொகையாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

*கடன் தீர்க்கும் நிதியை ஏற்படுத்துவது.*

74. கடன்வாங்கின தேதிமுதல் ஒரு வருஷம் கழிவதற்கு முன்பாக மீண்டும் செலுத்தப்படவேண்டியிராமல் போர்டாரால் வாங்கப்பட்டிருக்கும் கடன்தொகைகள் விஷயத்திலே, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டாலொழிய முப்பது வருஷத்துக்கதிகப்படக்கூடாத ஒரு காலவரையறைக்குள்ளாக அந்தக் கடனைத் தீர்ப்பதற்குப் போதுமான ஒரு தொகையை, ஷை போர்டார் தங்களுடைய வருமானத்திலிருந்து அரைவருஷத்திற்கொருதரம் கடன்தீர்க்கும் நிதியாகப் பிரத்தியேகமாய் எடுத்துவைத்துவிடவேண்டும்; ஆனால், உச்ச காலவரையறை எந்த விஷயத்திலும் அறுபது வருஷத்துக்கு மேற்படக்கூடாது. மேலும், கடன்தீர்க்கும் நிதியை ஸ்தாபிப்பதைப்பற்றி யாதொரு ஏற்பாடும் இராத பட்சத்திலே, ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களிடத்திலிருந்து வாங்கியிருக்கும் கடன் தொகைகள் விஷயத்தில் அந்த நிதியை ஸ்தாபிக்கவேண்டிய அவசியமில்லை.

*கடன் தீர்க்கும் நிதித் தொகையைக் கட்டிவைப்பது.*

75. (1) மேலேகண்டபடி பிரத்தியேகமாய் எடுத்துவைக்கப்பட்டிருக்கும் தொகைகள் இந்தியா கவர்ன்மென்டாருடைய பத்திரங்களின் மேலாவது போர்டாருடைய டிபென்சர்கள் என்னும் கடன்பத்திரங்களின் மேலாவது கொடுத்துவைக்கப்படவேண்டியது மல்லாமல், இந்த ஆக்டின் காரியங்களுக்காக இரண்டு ட்ரஸ்டிகளின் பொறுப்பில் வைக்கப்பட்டுமிருக்கவேண்டும்; இவர்களில் ஒருவர் போர்டாராகவும் மற்றொருவர் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படும் நபராகவும் இருக்கவேண்டும்.

*கடன் தீர்க்கும் நிதியை உபயோகிப்பது.*

(2) எந்தத்தொகைகளை மீண்டும் செலுத்துவதற்காகக் கடன் தீர்க்கும் நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தத் தொகைகளைக் கொடுத்துவிடுவதிலாவது கொடுத்துக்கொண்டே வருவதிலாவது ஷை நிதியில் சேர்ந்திருக்கும் தொகைகள் முழுவதையுமாகிலும் அவைகளில் யாதொரு பாகத்தையாகிலும் போர்டார் உபயோகப்படுத்தலாம்; ஆனால், அந்தப்படி உபயோகிக்கப்பட்ட கடன்தீர்க்கும் நிதியிலிருந்தாயினும் அந்த நிதியின் யாதொரு பாகத்திலிருந்தாயினும் கிடைத்திருக்கக்கூடிய வட்டிக்குச் சரியான ஒரு தொகையை, வாங்கப்பட்ட கடன் தொகை முழுவதும் தீர்த்துவிடப்படுகிறவரையிலே, அவர்கள் பிரதி வருஷமும் அந்த நிதிக்குச் செலுத்திச் சேர்த்துக்கொண்டு வரவேண்டும்.

*கடன் தீர்க்கும் நிதியைப் பரிசோதனை செய்வது.*

76. யாதொரு கடனைத் தீர்ப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட கடன்தீர்க்கும் நிதியானது வருஷவாரியில் சென்னபட்டணம் அகௌன்டன்ட் ஜெனரலவர்களால் பரிசோதனை செய்யப்படுவதற்குட்பட்டிருக்கவேண்டும்; இவர் - தொகைகள் கிரமமாய்க் கட்டப்பட்டிருந்து பிரதமத்தில் மதிப்பேற்படுத்தப்பட்டபடி வட்டி வீதம் அந்தத் தொகைகளுக்கு வாப்பற்றியிருந்தால் சேர்ந்திருக்கக்கூடிய மொத்த தொகைக்கு ஷை நிதியின் வரவிலிருக்கும் ஈடுகளின் ரொக்கமதிப்பும் சாதாரணமாய் வழங்கும் மதிப்பும் வாஸ்தவத்தில் சரியாயிருக்கிறதாவென்று கண்டறியவேண்டும். யாதொரு தொகை குறைகிறதென்று அகௌன்டன்ட் ஜெனரல் ஸெர்டிபை செய்தால் அந்தத் தொகையை போர்டார் உடனே கடன் தீர்க்கும் நிதிக்குச் செலுத்திவிடவேண்டும்.

**1914-ம்வருஷத்து 9-வது ஆக்ட்.**

*சிறிது கால அளவுள்ள பில்லுகளின்மேல் கடன் வாங்க அதிகாரம்.*

77. பிரதேச அதிகாரிகள் கடன் வாங்குவதைக் குறித்த 1914-ம்வருஷத்து ஆக்டின்படி கடன் வாங்க போர்டாருக்குள்ள அதிகாரத்துக்கு இந்த ஆக்டில் கண்டதெதனாலும் பாதகம் உண்டாவதாக எண்ணக்கூடாது.

## 8-ம் அத்தியாயம்.

### செலவு.

*போர்டார் இன்ன விஷயங்களுக்காகப் பணம் செலவிடலாமென்பது.*

78. (1) 98-வது பிரிவின் நிபந்தனைகளுக்கும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்துக்கும் உட்பட்டு, போர்டார் - இந்த ஆக்டின்படி தங்கள் பாமாயிருக்கிற அல்லது அதன்படி தாங்கள் அடைந்திருக்கிற யாதொரு சொத்தின் வாடகைகள் - வரும்படி முதலிய வருமானங்களையும், இந்த ஆக்டின்

படியாவது இதை அனுசரித்தாவது தாங்கள் அடைகிற சகல தொகைகளையும் அடியிற்கண்ட காரியங்களுக்காகவும் அடியிற்கண்ட வரிசைக்கிரமத்தின்படியும் உபயோகிக்கவேண்டும் ; அவையாவன :—

(a) இந்த ஆக்டின்படி நியமிக்கப்பட்டிருக்கும் அக்கிராசனாதிபதிக்கும் உப அக்கிராசனாதிபதிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் பாக்கியாகிற சம்பளம் - கட்டணம் - வர்த்தனை - பென்ஷன் - க்ராட்யூட்டி (நன்கொடை) - தயாவிஷமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனை அல்லது வேறே தொகைகள் ஆகிய இவைகளுக்காகவும், ஷை உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களுடைய பிரயோசனத்துக்காக ஸ்தாபிக்கப்படும் யாதொரு எதிர்கால சகாய நிதிக்கு ஏதாவது ஈவுத்தொகை கொடுக்கும்படி உத்தரவாயிருந்தால் அப்படிப்பட்ட ஈவுத்தொகைகளுக்காகவும் ;

(b) போர்டார் பரமாயிருக்கும் சொத்துக்கு மரமத்து செய்வதற்கும் அதைப் பராமரிப்பதற்கும் பிடிக்கும் செலவுக்காகவும், அதற்காகப் பிடிக்கும் சகல பட்டுபடிகளுக்காகவும் வேலை சம்பந்தமாய்ச் செலவாகும் சகல தொகைகளுக்காகவும் ;

(c) போர்டார் அப்போதைக்கப்போது செலுத்தவேண்டியிருக்கிற யாதொரு வட்டித்தொகையைச் செலுத்துவதற்காகவும் ;

(d) கடன் தீர்க்கும் நிதிக்குத் தொகைகள் செலுத்துவதற்காகவும், கடன் தொகைகளைச் செலுத்தவேண்டிய காலத்திலே அவைகளின் அசல் தொகையை மீண்டும் செலுத்துவதற்காகவும் ;

(e) வருமானத்தில் செலவிடவேண்டுமென்று போர்டார் தீர்மானிக்கும் யாதொரு புதுவேலை - தளவாடம் - மரக்கலம் அல்லது உபகரணத்தின் பட்டுபடிக்காகவும் அல்லது அந்த பட்டுபடியின் பாகத்துக்காகவும் ;

(f) போர்ட் மெம்பர்களுக்குப் பிரதிபலன் கொடுப்பதற்காகவும் ;

(g) பொதுவாய் இந்த ஆக்டின் காரியங்களுக்காகவும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியைப் பிரத்தியேகமாய் பெற்றுக்கொண்டு, போர்டார்-தங்களிடத்தில் வேலையாயிருப்பவர்களின் பொழுதுபோக்குக்காகவாவது மற்றப்படி அவர்களுடைய க்ஷேமாபிவிருத்திக்காகவாவது சௌகரியங்கள் ஏற்படுத்திக்கொடுப்பதற்காக செலவு செய்யலாம்.

ரிஸெர்வ் பண்ட் ஏற்படுத்துவது.

79. (1) போர்டார் - சாசுவதமாயிராத காரணங்களினால் வருமானம் எப்போதாகிலும் சிறிது காலத்துக்குக் குறைந்துபோனாலும் செலவு சிறிது காலத்துக்கு அதிகப்பட்டாலும் அதற்காக ஏற்பாடுசெய்யும் காரியத்துக்காகவாவது, தற்காலத்திலுள்ள சாதனங்களுக்கு பர்த்தியாக வேறே சாதனங்களை அமைக்கும் காரியத்துக்காகவாவது, தீயினாலோ கப்பல் சேதமடைவதனாலோ அல்லது வேறே வகையான இடையூறினாலோ உண்டாகும் நஷ்டம் அல்லது சேதத்தினால் ஏற்படக்கூடிய செலவு செய்வதற்காகவாவது, இந்த ஆக்டின்படி சாதாரணமாய்த் தங்களுடைய வேலையைச் செய்துகொண்டு போகையில் நேரிடக்கூடிய வேறே யாதொரு அவசரமான சந்தர்ப்பத்துக்காகவாவது, தங்களுடைய வருமானத்தில் மிகுதி நிற்பதிலிருந்து தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற தொகைகளை ரிஸெர்வ் பண்ட் அல்லது பண்டுகள் என்னும் சேமநிதியாக அப்போதைக்கப்போது பிரத்தியேகமாய் எடுத்து வைக்கலாம் ;

ஆனால், ரிஸெர்வ் பண்ட் அல்லது பண்டுகளாக எடுத்துவைக்கப்படும் தொகைகள்-பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நிஷ்கரிஷை செயயப்படக்கூடிய வருஷாந்தரத் தொகைக்கோ அல்லது மொத்த தொகைக்கோ மேற்படக்கூடாது.

(2) ஷை ரிஸெர்வ் பண்ட் அல்லது பண்டுகள் என்னும் சேமநிதியை - இந்தியா கவர்ன்மெண்டாரின் ப்ராமிஸெரி நோட் முதலிய கடன் பத்திரங்கள் அல்லது இந்த ஆக்டின்படி போர்டாரால் வெளிவிடப்பட்ட டிபென்சர் என்னும கடன் பத்திரங்களில் மாத்திரமே போட்டுவைக்கலாம்.

மூலதனத்திலிருந்து செலவு செய்யப் பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெறவேண்டுமென்பது.

80. பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் போர்டார் எந்த செலவையும் மூலதனத்தின்மேல் சுமத்தலாகாத.

போர்டார் அல்லது பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியைப் பெறவேண்டிய வேலைகள்.

81. இரண்டாயிரம் ரூபாய்க்கதிகமாகப் பிடிக்குமென்று மதிப்பேற்படுத்தப்பட்ட யாதொரு நூதன வேலையாவது உபகரணமாவது போர்டாரால் ஆரம்பிக்கப்படுவதற்கு அல்லது ஏற்படுத்தப்படுவதற்கு முன்பாகிலும், அப்படிப்பட்ட யாதொரு நூதன வேலை அல்லது உபகரணத்தின் விஷயமாய் போர்டார் யாதொரு ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்வதற்கு முன்பாகிலும், அப்படிப்பட்ட

வேலை அல்லது உபகரனத்துக்காக ஒரு (ப்ளான்) நக்ஷாவும் (எஸ்டிமேட்) மதிப்புக்கணக்கும் போர்டாருக்கு அனுப்பப்பட்டு அவர்களால் அங்கீகரிக்கப்படவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட நூதன வேலைக்காவது உபகரணத்துக்காவது இவ்வளவு பிடிக்குமென்று மதிப்பேற்படுத்திய தொகை இருபத்தையாயிரம் ரூபாய்க்கதிகப்படுகிற விஷயத்தில், அப்படிப்பட்ட வேலையை ஆரம்பிப்பதற்கு அல்லது உபகரணத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாக ஷை நக்ஷாவுக்கும் மதிப்புக்கணக்குக்கும் பிரதேச கவர்ன்மெண்டாரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

பட்ஜெட் க்ரான்டில்கண்ட தொகைக்கு மேற்பட்டு செலவு செய்யக்கூடாதென்பது.

82. உடனே நடவடிக்கை நடத்தவேண்டிய விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களில், பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகாரம் செய்யப்பட்டும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டுமிருக்கிற மதிப்புக்கணக்கில் யாதொரு அம்சத்திற்காக எவ்வளவு தொகை ஏற்பட்டிருக்கிறதோ அதற்கு அதிகமாக அந்த அம்சத்திற்கு போர்டார் பிரதேச கவர்ன்மெண்டாருடைய சம்மதியில்லாமல் எவ்வளவும் செலவு செய்யக்கூடாது.

பட்ஜெட் க்ரான்டைவிட இவ்வளவுக்கு மேற்பட்டுச் செலவு செய்யக்கூடாதென்னும் வரையறை.

83. (1) உடனே நடவடிக்கை நடத்தவேண்டியிருக்கிற யாதொரு விஷயத்தில், பிரதேச கவர்ன்மெண்டாருடைய அனுமதியில்லாமல் போர்டார்-இந்த ஆக்டின்படி எந்த அம்சத்திற்காகப் பணம் செலவுசெய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்களோ அது விஷயமாக,—

(i) பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகாரஞ்செய்யப்பட்டும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டுமிருக்கிற ஒரு மதிப்புக்கணக்கில் அந்த அம்சத்திற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய தொகைக்கதிகமாக ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் யாதொரு தொகையையும்,

(ii) அப்படிப்பட்ட யாதொரு மதிப்புக்கணக்கில் தொகை ஏற்பட்டிராத யாதொரு அம்சத்திற்காக ஐயாயிரம் ரூபாய்க்கதிகப்படாமல் யாதொரு தொகையையும்

செலவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டார் யாதொரு செலவுக்காக அனுமதி கொடுக்கும்போதெல்லாம், அக்கிராசனாதிபதியானவர் - அந்த விஷயத்தின் சந்தர்ப்பங்களையும், செலவுக்குச் சரிக்கட்ட போர்டார் பிரேரேபிக்கும் மாதிரி இன்னதென்றும் பிரதேச கவர்ன்மெண்டாருக்கு உடனே தெரிவிக்கவேண்டும்.

## 9-ம் அத்தியாயம்.

### கணக்குகளும் மதிப்புக்கணக்குகளும் ஒப்பந்தங்களும்.

கணக்குகளைத் தணிக்கை செய்து பரிசோதனை பண்ணுவது.

புஸ்தகங்கள் முதலியவற்றை வரவழைக்கக் கணித பரிசோதகர்களுக்குள்ள அதிகாரம்.

84. போர்டாருடைய வரவு செலவு கணக்குகளை வருஷத்திற்கொருமுறை பிரதேச கவர்ன்மெண்டார் பார்வையிடுவதற்காக அனுப்பவேண்டும்; அவைகளைப், பிரதேச கவர்ன்மெண்டாரால் அப்போதைக்கப்போது நியமிக்கப்படுகிற கணித பரிசோதகர்கள் தணிக்கை செய்து பரிசோதிக்கவேண்டும். கணக்குகளை அப்படி தணிக்கை செய்து பரிசோதனை பண்ணுவதற்காக, அந்த கணித பரிசோதகர்கள்-எழுத்துமூலமாய்க் கட்டளையனுப்பி, தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற சகல புஸ்தகங்கள் - சாஸனங்கள் - ஒப்பந்த உடன்படிக்கைகள் - ஆதாவுகள் முதலிய சகல தஸ்தவேஜுகளையும் காகிதங்களையும் தங்களுக்குமுன் கொண்டுவரும்படி உத்தரவுசெய்யலாம்; மேலும், மேற்படி புஸ்தகமுதலானவைகளில் எதையாகிலும் வைத்துக்கொண்டாவது அதற்கு உத்தரவாதம் செய்யவேண்டியாவதிருக்கிற யாதொரு நபரை அவர்கள் - அப்படி தணிக்கைசெய்து பரிசோதனை பண்ணுகையிலாகிலும் அப்படிச் செய்வதை நிறுத்திவைத்து மறுபடியும் ஆரம்பிக்கும் போதாகிலும் தங்களுக்குமுன் ஹாஜராகி, அவைகளின் விஷயமாய் அவரைக் கேட்கிற சவால்களுக்கெல்லாம் ஜவாப் சொல்லும்படிக்காவது மேற்சொல்லியதற்கு விவரணமாகப் பின்னும் ஏதாவது ஸ்டேட்மென்ட் வேண்டியதென்று தங்களுக்குத் தோற்றினால் அதைத் தயார்செய்து அனுப்பும்படிக்காவது உத்தரவுபண்ணலாம்.

தணிக்கை ரிபோர்ட் பிரசுரஞ்செய்வது.

85. தணிக்கையும் பரிசோதனையும் செய்து முடிந்ததற்குப் பின்பு பதினைந்து தினத்துக்குள்ளாகக் கணிதபரிசோதகர்கள் - தணிக்கைசெய்து பரிசோதித்த கணக்குகளைப்பற்றி ரிபோர்ட் பண்ணவேண்டியது மல்லாமல், அந்த ரிபோர்ட்டின் பிரதிகளைப் பிரதேச கவர்ன்மெண்டாருக்கும் போர்டாருக்கும் அனுப்பவும்வேண்டும். போர்டார் - அந்த ரிபோர்ட்டையும் கணக்குகளுக்கு ஒரு கோஷ்வாராவையும் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் பிரசுரம் செய்விக்கவேண்டும்.

கணித பரிசோதகர்களுக்குப் பிரதிபலன்.

86. பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய பிரதிபலனை போர்டார் கணிதபரிசோதகர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

வருஷவாரி வரவுசெலவு மதிப்புக்கணக்கை போர்டார் முன்வைப்பது.

87. ஒவ்வொரு வருஷத்திலும் ஜனவரிமீ 20உயிலாவது அதற்கு முன்பாவது கூட்டப்படும் விசேஷ சபையில் அக்கிராசனாதிபதியானவர் - அதற்கு அடுத்துவருகிற ஸர்க்கார் வருஷத்திற்காக போர்டாருக்குக் கிடைக்கும்படியான வருமானத்தைப்பற்றியும் பிடிக்கும்படியான செலவைப்பற்றியும் ஒரு மதிப்புக்கணக்கை போர்டாருக்குமுன் வைக்கவேண்டும். அப்படிப்பட்ட பிரதி மதிப்புக்கணக்கும் பிரதேச கவர்ன்மென்டார் நிர்ணயிக்கக்கூடிய நமூனாப்படி இருக்கவேண்டும்.

ட்ரஸ்டிகளுக்கு மதிப்புக் கணக்கை அனுப்புவது.

88. அந்த மதிப்புக்கணக்கை அச்சிட்டு, அதற்கு ஒரு பிரதியை ஒவ்வொரு ட்ரஸ்டிக்கும் தபால் மூலமாயாவது வேறே விதமாயாவது அந்த மதிப்புக்கணக்கு எந்த விசேஷ சபைக்குமுன் 87-வது பிரிவின்படி கொண்டுவரப்படவேண்டியதோ அந்த சபை கூடுவதற்காக நியமிக்கப்பட்ட தினத்திற்குப் பரிஷ்காரமாய்ப் பத்து நாளைக்குக் குறையாமல் முன்னதாக அனுப்பவேண்டும்.

மதிப்புக்கணக்கைப் புனராலோசனை செய்வதும் ஜாரிபண்ணுவதும்.

89. போர்டார் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அப்படிப்பட்ட சபையில் அந்த மதிப்புக்கணக்கை ஜாரிசெய்யலாம் அல்லது தள்ளிவிடலாம், அல்லது அதை மாற்றலாம் அல்லது திருத்தலாம்; மேலும், அவ்விதமாக மாற்றப்பட்டபடி அல்லது திருத்தப்பட்டபடி அந்த மதிப்புக்கணக்கை ஜாரிசெய்யலாம்.

மதிப்புக்கணக்கைப் பிரதேச கவர்ன்மென்டார் அங்கீகாரம் செய்வது.

90. (1) போர்டார் அப்படி மதிப்புக்கணக்கை ஜாரிசெய்தபின்பு அப்படிப்பட்ட ஒவ்வொரு மதிப்புக்கணக்கையும் பெப்ரவரி மாதம் பத்தாம் தேதிக்கு மேற்படாமல் பிரதேச கவர்ன்மென்டாருக்கு அனுப்பவேண்டும்; பிரதேச கவர்ன்மென்டார் அந்த மதிப்புக்கணக்கை அங்கீகாரஞ்செய்யலாம் அல்லது அதைக்குறித்து அபிப்பிராயங்களையெழுதி அதைத் திருப்பிவிடலாம்; மேலும், தங்களுக்கு அவசியமாகத் தோற்றும் இன்னும் சங்கதி தெரிவிக்கவேண்டுமென்றும் கேட்கலாம்; அன்றியும், அந்த அபிப்பிராயங்களை அனுசரித்து போர்டார் அந்த மதிப்புக்கணக்கை உடனே புனராலோசனை செய்யத்தொடங்கவேண்டியதுமல்லாமல், பிரதேச கவர்ன்மென்டார் வேண்டியதென்று கேட்கும் இன்னும் சங்கதியைத் தெரிவிக்கவும்வேண்டும்; அல்லாமலும், அந்த கணக்கை மாற்றவேண்டியிருந்தாலும் திருத்தவேண்டியிருந்தாலும் அப்படியே செய்து அதைப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு மறுபடி அனுப்பவேண்டும்.

(2) பிறகு மதிப்புக்கணக்கில் பதியப்பட்டிருக்கும் சகல அம்சங்களையுமாவது அவைகளில் எதையாவது பிரதேச கவர்ன்மென்டார் ஜாரிசெய்யவேண்டும், தள்ளிவிடவேண்டும் அல்லது மாற்றவேண்டும்; அல்லது அவைகளோடு யாதொரு அம்சத்தைச் சேர்க்கவேண்டும். ஆனால், அப்படி மாற்றுவதாவது தள்ளிவிடுவதாவது சேர்ப்பதாவது இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளுக்கு முரண்படவுங்கூடாது, அதனால் கடன் வாங்கவேண்டிய அவசியம் நேரிடவும்கூடாது.

உடன் சேர்க்கையான மதிப்புக் கணக்குகள் தயார்செய்வது.

91. எந்த வருஷத்திற்காக மதிப்புக்கணக்கை பிரதேச கவர்ன்மென்டார் அங்கீகாரம் செய்திருக்கிறார்களோ அந்த வருஷம் நிகழ்ந்துகொண்டிருக்கையில் எப்போதாவது, அந்த வருஷத்தில் செல்லாமல் மிகுதியாயிருக்கிற காலத்திற்கு ஒன்று அல்லது பல உடன்சேர்க்கையான மதிப்புக்கணக்குகளை போர்டார் தயார்செய்வித்துத் தங்கள் முன்னிலையில் கொண்டுவரும்படி செய்யலாம்; 88-வது, 89-வது, 90-வது பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறையை, பிரயோகப்படக்கூடியமட்டில் அப்படிப்பட்ட உடன்சேர்கையான மதிப்புக் கணக்குகளின் விஷயத்தில் அனுசரிக்கவேண்டும்.

ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ள அதிகாரம்.

92. (1) (2) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, போர்டார் - இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காக யாதொரு ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு ஒப்பந்த உடன்படிக்கையின்படி செலுத்தப்படத்தக்க தொகையானது இருபத்தையாயிரம் ரூபாய்க்கு அதிகப்பட்டால், போர்டார் - பிரதேச கவர்ன்மென்டாரின் சம்மதியுடன் மாத்திரமே ஷை ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளலாம்.

இன்னபடி ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்வதென்பது.

93. போர்டார் நிர்ணயிக்கக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கு அல்லது திட்டங்களுக்கு உட்பட்டு, போர்டாருக்காகவும் போர்டாரின் சார்பிலும் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு ஒப்பந்த உடன்படிக்கையையும், அக்கிராசனாதிபதி அல்லது உப அக்கிராசனாதிபதியானவர்-ஷை ஒப்பந்த உடன்படிக்கை சொந்தத்தில் தமக்காகவே செய்துகொள்ளப்பட்டிருந்தால் எந்த மாதிரியாகவும் என்ன நமூனாப்படியும் செய்துகொள்ளப்பட்டிருக்குமோ அந்த மாதிரியாகவும் அந்த நமூனாப்படியும் செய்துகொள்ளவேண்டும்.

94. போர்டார் - தங்களால் செய்யப்பட்ட யாதொரு ஒப்பந்த உடன்படிக்கை விஷயமாய் உண்டாகிற யாதொரு தாவா அல்லது உரிமையைப்பற்றியாவது, தங்களாலாகிலும் தங்கள்மேலாகிலும் கொண்டுவரப்பட்ட யாதொரு வியாஜ்ஜியம் அல்லது வழக்கைப்பற்றியாவது சமாதானம் பண்ணலாம் அல்லது ராஜிசெய்யலாம்.

தாவாக்களை சமாதானமாவது ராஜியாவது செய்ய அதிகாரம்.

## 10-ம் அத்தியாயம்.

(பைலட்டுகளும்) ஆறுகாட்டிகளும் ஹார்பர் மாஸ்டர்களும்.

95. ரேவில் மரக்கலங்களை ஆறுகாட்டிசெலுத்துவதற்காக ஆறுகாட்டிகளையோ ஹார்பர் மாஸ்டர்களையோ வைத்து ஆதரிப்பதற்கு போர்டாருக்குச் சுதந்தரமும் சலக்கரணையும் இருக்கவேண்டும்; ஆறுகாட்டி கப்பலைச் செலுத்துவதற்கான சகல கட்டணங்களும் போர்டாருக்குச்செலுத்தப்படவேண்டும்.

ஆறுகாட்டி கப்பலைச் செலுத்துவதற்கான கட்டணங்கள்.

1908-ம் ஹூ த்து 15-வது ஆக்ட்.

96. 1908-ம் ஹூத்திய இந்துதேசத்து ரேவுகளைக்குறித்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி ஆறுகாட்டி கப்பலைச் செலுத்துவதற்காகப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அந்தந்த காலத்தில் அனுமதி கொடுக்கப்பெறாத யாதொரு நபரை ஆறுகாட்டியாகவோ அல்லது ஹார்பர் மாஸ்டராகவோ நியமிக்கக்கூடாது.

ஆறுகாட்டிகளை நியமிப்பது.

97. (1) 23, 24, 26-வது பிரிவுகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, போர்டார்-ஆறுகாட்டிகளுடைய அல்லது ஹார்பர் மாஸ்டர்களுடைய நடத்தையைக்குறித்தும் ஒழுக்கத்தைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக விசேஷ ரெகுலேஷன்கள் ஏற்படுத்தலாம்; மேலும், அந்த ரெகுலேஷன்களை எவராகிலும் மீறிநடந்தால் அவர் வேலையிலிருந்து சிறிதுகாலத்துக்கு நீக்கிவைக்கப்படுவது, தள்ளிவிடப்படுவது அல்லது அதுபோன்ற தண்டனைகளில் எம்மாதிரியான தண்டனை விதிப்பது யுக்தமாயிருக்குமென்று போர்டாருக்குத் தோற்றக்கூடுமோ அம்மாதிரியான தண்டனையுடன்கூட இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படுவதற்கும் உள்ளாவாரென்று அவர்கள் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

ஆறுகாட்டிகளைக் குறித்த விதிகளும் ரெகுலேஷன்களும்.

(2) அந்த ரெகுலேஷன்கள் பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு போர்ட் ஸேய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசித்தஞ் செய்யப்பட்டாகிறவரையில் செலாவணியாகமாட்டா.

98. போர்டாருடைய கணக்குகளிலே ஆறுகாட்டிகப்பலைச் செலுத்தும் சம்பந்தமாக ஏற்படும் கணக்கைப் பொதுக்கணக்கில் சேர்க்காமல் பிரத்தியேகமாய் வைக்கவேண்டும். ஆறுகாட்டிகளிடத்திலிருந்தாவது ஹார்பர் மாஸ்டர்களிடத்திலிருந்தாவது ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் ஊழியத்தில் அமர்ந்திருக்கும் இதர நபர்களிடத்திலிருந்தாவது இந்த ஆக்டின்படி விதித்து வாங்கப்படும் அபராதமுதலிய சகல தண்டத்தொகைகளையும் ஆறுகாட்டி கப்பலைச் செலுத்துவதற்கான சகல கட்டணங்களையும் ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் சம்பந்தமாக ஏற்படும் கணக்கில் வரவாக வைக்கவேண்டும்.

ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் சம்பந்தமான கணக்கு.

99. 98-வது பிரிவின்படி ஆறுகாட்டி கப்பலைச்செலுத்தும் சம்பந்தமான கணக்கில் வரவாக வைக்கப்படும் சகல தொகைகளும், போர்டார் அப்போதைக்கப்போது கட்டளையிடும் சங்கியாபரிமாணப்படி அடியிற்கண்ட காரியங்களுக்காக மாத்திரம் உபயோகிக்கப்படவேண்டும்; அவையாவன :—

ஆறுகாட்டி கப்பலைச் செலுத்துவது சம்பந்தமாய்ச் செலவிடுவது.

(1) ஆறுகாட்டி கப்பலைச்செலுத்தும் வேலையை நன்றாய்ச் செய்வதற்காக பராமரிப்பது அல்லது சர்ப்பராசெய்வது அவசியமென்று போர்டாருக்குத் தோற்றக்கூடிய மரக்கலங்களை வாங்குவதற்காகவும் அவைகளை ஒழுங்கான ஸ்திதியில் வைத்துப் பராமரிப்பதற்காகவும், அப்படி தோற்றுகிற சாமான்கள் - பண்டங்கள் அல்லது வேறே வஸ்துக்களை சர்ப்பராசெய்வதற்காகவும்;

(2) ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் ஊழியத்திலாவது அதை மேற்பார்வையிடவாவது அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் பைலட்டுகள் அல்லது ஹார்பர் மாஸ்டர்களுக்கும் போர்டாரைச் சேர்ந்த இதர உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் சம்பளங்களையும் வர்த்தனைகளையும் கொடுப்பதற்காகவும்;

(3) ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் ஊழியஞ்செய்வதில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் பைலட்டுகள் அல்லது ஹார்பர் மாஸ்டர்களுக்கும் இதர உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் பென்ஷன் கொடுப்பதற்காகவும் அல்லது அவர்கள் கடைசியாய் உத்தியோகத்தைவிட்டு நீங்கும் காலத்தில் அவர்களுக்கு க்ராட்யூட்டி (நன்கொடை) அல்லது தயாவிஷயமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனை கொடுப்பதற்காகவும், அவர்களுக்கா

யாதொரு எதிர்கால சகாயநிதிக்கு ஈவுத்தொகை ஏதாகிலும் செலுத்தும்படி கிரமமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட ஈவுத்தொகைகளைச் செலுத்துவதற்காகவும் ;

(4) ஆறுகாட்டி கப்பலைச் செலுத்தும் ஊழியஞ்செய்வதில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்து அலுவலைச் செய்துகொண்டிருக்கையிலே துன்பமடைந்த பைலட்டுகள் அல்லது ஹார்பர் மாஸ்டர்களுக்கும் இதர உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும், மேலே சொன்னபடி வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டு தங்களுடைய வேலையைச் செய்துகொண்டிருக்கையில் இறந்துபோகும் பைலட்டுகள் அல்லது ஹார்பர் மாஸ்டர்கள், உத்தியோகஸ்தர்கள், வேலைக்காரர்கள் - ஆகிய இவர்களுக்குப்பின் ஜீவித்திருக்கும் இவர்களுடைய பந்துக்களுக்கும் கொடுக்கும்படி போர்டார் ஜாரிசெய்திருக்கிற பென்ஷன்களையும் க்ராட்யூட்டி (நன்கொடை)களையும் தயாவிஷயமாய்க் கொடுக்கப்படும் வர்த்தனைகளையும் கொடுப்பதற்காகவும்.

## 11-ம் அத்தியாயம்.

### சகாயச்சட்டங்கள்.

சகாயச்சட்டங்கள் செய்ய அதிகாரம்.

100. போர்டார்—

(1) இந்த ஆக்டின்படி போர்டாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டவர்கள் அனுசரித்து நடந்துகொள்வதற்காகவும்,

(2) இந்த ஆக்டின்படி போர்டாரால் ஏற்படுத்தப்பட்டாவது அவர்கள் பரமாகவாவதிருக்கிற டாக்குகள் - ஏற்றிறக்குமதிக்கான செய்கரைகள் - மேட்டுவழிகள் - அணைகள்- கொட்டகைகள் - சாமான்கிடங்குகள் - ரெயில்வேக்கள் - ட்ராம்வேக்கள் முதலிய கட்டுவேலைகளை ஜாக்கிரதையாய் அனுகூலமாக உபயோகப்படுத்திக்கொள்வதற்காகவும்,

(3) போர்டாரால் கட்டப்பட்டாவது அவர்கள் பரமாகவாவதிருக்கிற இறங்குவதற்கான பொது ஸ்தானங்களை உபயோகப்படுத்திக்கொள்வதற்காகவும்,

(4) போர்டாருடைய வளவுக்குள் கொண்டுவரப்பட்ட சரக்குகளை வரப்பெற்றுக்கொள்ளுவதற்காகவும் கொண்டுபோவதற்காகவும் சேர்த்துவைப்பதற்காகவும் அப்புறப்படுத்துவதற்காகவும், போர்டார் அல்லது அவர்களால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட நபர்கள்மாத்திரமே இந்த வேலைகளை நடத்துவதற்காகவும்,

(5) ஹார்பரையும் மரக்கலங்கள் நிற்கும் பேஸின்களையும் போர்டாருடைய கட்டுவேலைகளையும் சுத்தியாய் வைத்துக்கொண்டிருப்பதற்காகவும், அவைகளிலாவது அவைகளின் மேலாவது குப்பை கூளமுதலிய கசுமாலங்களைப் போடவொட்டாமல் தடுப்பதற்காகவும்,

(6) இந்த ஆக்டின்படி விதிக்கப்படத்தக்க வீதவரிகளை இன்ன விதமாய்ச் செலுத்தவேண்டியதென்பதற்காகவும்,

(7) போர்டார் பரமாயிருக்கிற எவைகளில் சரக்குகளை மரக்கலங்களிலிருந்து இறக்கவும் மரக்கலங்களுக்கு ஏற்றவும் வேண்டியதோ அப்படிப்பட்ட டாக்குகள் - ஏற்றிறக்குமதிக்கான செய்கரைகள் - மேட்டுவழிகள் - அணைகள் - நிற்பதற்கான நிலைகள் - சமுத்திரவாராவதிகள் ஆகிய இவைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், நிர்ணயிப்பதற்காகவும், வரையறுப்பதற்காகவும்,

(8) ஒரு கப்பலிலிருந்து வேறொரு கப்பலுக்காவது கப்பல்களிலிருந்து கரைக்காவது கரையிலிருந்து கப்பல்களுக்காவது சாமானைச் சுமைப்படகுகளில் ஏற்றிக்கொண்டு போவதைப்பற்றி ஒழுங்கேற்படுத்துவதற்காகவும்,

(9) ஒழுங்கீனமான நபர்களையும் அல்லது விரும்பத்தகாத இதர நபர்களையும் துராகிருதமாய்ப் பிரவேசிப்பவர்களையும் தங்களுடைய வளவிலிருந்து விலக்குவதற்காகவும்,

(10) பொதுவாய் இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காகவும்,

இந்த ஆக்டின் நிபந்தனைகளுக்காவது, 1908-ம்௵த்திய இந்துதேசத்து ரேவுகளைக்குறித்த ஆக்டின் நிபந்தனைகளுக்காவது முரண்படாமல் அப்போதைக்கப்போது சகாயச்சட்டங்கள் செய்யலாம். 1908-ம்௵த்து 15-வது ஆக்ட்.

சகாயச்சட்டங்கள் செலாவணியாவது.

101. யாதொரு சகாயச்சட்டமாவது சகாயச்சட்டத்தைத் திருத்தினதாவது ரத்துபண்ணினதாவது போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் தொடர்ச்சியாய் மூன்றுதரமும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டில் ஒருதரமும் பிரசுரஞ்செய்யப்பட்டுப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டாகிறவரையில் செலாவணியாகமாட்டாது.

சகாயச்சட்டங்களை மீறி நடந்தால் தண்டனை.

102. யாதொரு சகாயச்சட்டத்தை எவராகிலும் மீறிநடந்தால் அவர் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும், அந்தப்படி மீறிநடந்துகொண்டேயிருந்தால், முதல்தடவை மீறிநடந்ததற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு அந்தப்படி மீறிநடந்து

கொண்டேயிருக்கும் ஒவ்வொரு தினத்துக்காகவும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும் விதிக்கப்படத்தக்கவராவாரென்று போர்டார் நிபந்தனை ஏற்படுத்தலாம்.

சகாயச் சட்டங்களையும், வீதவரிகள் - கட்டணங்கள் இவற்றின் பரிமாணங்களையும் தெரியும்படி வைப்பது.

103. போர்டார் - மேற்படி சகாயச்சட்டங்களையும் தங்களால் விதிக்கப்படத்தக்க வீதவரிகளின் பரிமாணங்களையும், தாங்கள் என்ன ஷரத்துகளின் படி ஊழியங்கள் செய்யவாவது ஊழியங்கள் செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யவாவது சித்தமாயிருக்கிறார்களோ அந்த ஷரத்துகள் கண்டெழுதிய ஒரு ஸ்டேட்மென்ட் சகிதமாக, ஏற்றிறக்குமதி செய்வதற்கான அந்தந்த செய்கரைகளிலும் டாக்குகளிலும் சமுத்திரவாராவதிகளிலும் தங்களுடைய வளவிலுள்ள சௌகரியமான மற்ற இடங்களிலும் மாட்டிவைக்கும்படிச் செய்யவேண்டும்.

சகாயச்சட்டங்களை ரத்துபண்ணுவது.

104. பிரதேச கவர்ன்மென்டார் எப்போதாவது போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் உத்தரவு பிரசுரஞ்செய்து அதன்மூலமாய் அப்படிப்பட்ட யாதொரு சகாயச்சட்டத்தை ரத்துபண்ணலாம்.

## 12-ம் அத்தியாயம்.

### தண்டனைகள்.

போர்டாரிடத்தில் செய்துகொள்ளுகிற ஒப்பந்தங்களில் பற்றுடைத்தாயிருந்தால் தண்டனே.

105. யாதொரு நபர் ட்ரஸ்டியாகவாவது போர்டாருடைய உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராகவாவதிருந்து, 8-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியில் அடங்காத யாதொரு விஷயத்தில், போர்டாரோடாகிலும் அவர்களாலாகிலும் அவர்கள் பட்சத்திலாகிலும் செய்துகொள்ளப்பட்ட யாதொரு ஒப்பந்தம் அல்லது அலுவலில் நேராகவாவது மற்றப்படியாவது யாதொரு பங்கு அல்லது பிரயோஜனம் அடைவாராகில், அப்படிப்பட்டவர் இந்தியன் பீனல் கோட் 168-வது பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றத்தைச் செய்தவராக எண்ணப்படுவார்.

1860-ம் ௵த்து 45-வது ஆக்ட்.
1860-ம் ௵த்து 45-வது ஆக்ட்.

சட்டத்திற்கு விரோதமாய் யாதொரு பொருளைப் பெற்றுக்கொண்டால் தண்டனே.

106. இந்தியன் பீனல் கோட் 21-வது பிரிவின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராயிராமல் போர்டாரிடத்தில் வேலையாயிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரர் - தமக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய பிரதிபலன் தவிர, யாதொரு உத்தியோக காரியத்தைச் செய்வதற்காகிலும் செய்யாமலிருப்பதற்காகிலும், தம்முடைய உத்தியோக அலுவலை நடத்துகையில் எவருக்காவது அனுகூலம் அல்லது பிரதிகூலம் செய்வதற்காகிலும் அதைச் செய்யாமலிருப்பதற்காகிலும், போர்டாரைக்கொண்டாவது ஸர்க்கார் உத்தியோகஸ்தர் என்கிற முறைமையில் யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரைக்கொண்டாவது கவர்ன்மென்டாரைக்கொண்டாவது யாதொரு நபருக்கு நன்மை அல்லது தீமையைச் செய்விப்பதற்காகிலும் செய்விக்க எத்தனப்படுவதற்காகிலும், இனமாக வேறே யாதொரு பொருளைத் தமக்காக அல்லது வேறொருவருக்காக எவரிடத்திலிருந்தாவது ஏற்றுக்கொண்டாலும் பெற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ள உடன்பட்டாலும், பெற்றுக்கொள்ள எத்தனப்பட்டாலும், அப்படிப்பட்டவர் - யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தரால் செய்யப்பட்ட அவ்வித குற்றத்திற்காக இந்தியன் பீனல் கோடில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தண்டனைக்குள்ளாவார்.

கணித-பரிசோதகருக்கு முன் ஹாஜராக நிராகரிப்பது அல்லது அசட்டையாயிருப்பது முதலியவற்றிற்காக தண்டனே.

107. 84-வது பிரிவின்படி யாதொரு கணிதபரிசோதகர் கிரமமாய்க் கட்டளையிடும்போது எவராகிலும் அவருக்குமுன் ஹாஜராகவாவது, ஏவையேனும் புஸ்தகங்கள் - சாஸனங்கள் - ஒப்பந்த உடன்படிக்கைகள் - கணக்குகள் - ஆதாரவுகள் - தஸ்தவேஜுகள் அல்லது காகிதங்களைக் காட்டவாவது, யாதொரு சவாலுக்கு ஜவாபு சொல்லவாவது, யாதொரு ஸ்டேட்மென்டைத் தயார்செய்து அனுப்பவாவது நிராகரித்தாலும் அசட்டைபண்ணினாலும், அப்படிப்பட்டவர் - அப்படி அசட்டைபண்ணுகிற அல்லது நிராகரிக்கிற பிரதி குற்றத்திற்காகவும் நூறு ரூபாய்க்கதிப்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

33-வது 34-வது அல்லது 36-வது பிரிவை மீறிநடந்தால் தண்டனே.

108. எவராகிலும் 33-வது அல்லது 34-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை மீறிநடந்தாலும், 36-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட யாதொரு திட்டத்துக்கு விரோதமாய் நடந்தாலும், அவருக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாமலும் நூறு ரூபாய்க்கு மேற்படாமலும் அபராத தண்டனையும், அந்தப்படி மீறியோ அல்லது விரோதமாகவோ நடந்துகொண்டிருந்தால், அப்படி மீறியோ அல்லது விரோதமாகவோ நடந்துகொண்டிருக்கிற ஒவ்வொரு தினத்துக்காகவும் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் பின்னும் அபராத தண்டனையும் விதிக்கப்படும்.

எற்றிறக்குமதிக்கான செய்கரைகளிலாவது வெளிக்கரையிலாவது குப்பை முதலியதைக் கொட்டிவைத்தால் தண்டனை.

109. போர்டாருடைய ஸ்வாதீனத்திலிருக்கிற யாதொரு எற்றிறக்குமதிக்கான செய்கரை - டாக் அல்லது சமுத்திரவாராவதியிலாவது அதன்மேலாவது, ரேவைச் சேர்ந்த வெளிக்கரையின் யாதொரு பாகத்திலாவது அதன்மேலாவது, யாதொரு நபர் - தகுந்த அதிகாரியினிடத்திலிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொள்ளாமல் தும்பு - தூசு - மலம் - சாம்பல் - குப்பை அல்லது எவ்வித கசுமாலத்தையாகிலும், கண்ணாடி பானைசட்டி ஓட்டை உடைச்சல் முதலிய கழிகடையையாகிலும் வேண்டுமென்று கொட்டி வைத்தாலும், தம்முடைய வேலைக்காரர்களைக் கொட்டிவைக்கவொட்டினாலும், அப்படிப்பட்டவர் - பிரதி குற்றத்திற்காகவும் பத்துரூபாய்க் கதிகப்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

அனுமதியில்லாமல் எற்றிறக்குமதிக்கான செய்கரைகள் மேட்டுவழி முதலியவைகள் எற்படுத்தினால் தண்டனை.

110. (1) போர்டாராவது ரேவிலுள்ள போர்ட் கன்ஸர்வேட்டராவது தவிர வேறே எவராகிலும் முதலில் பிரதேச கவர்ன்மென்டாரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், ரேவின் எல்லைக்குள் எற்றிறக்குமதிக்கான யாதொரு செய்கரை - மேட்டுவழி - சமுத்திரவாராவதி - கப்பல் கட்டுமிடம் அல்லது வேறே எவ்வித கட்டுவேலையை உண்டுபண்ணினாலும் எற்படுத்தினாலும் நிலைநிறுத்தினாலும், அப்படிப்பட்டவர் - ஆயிரம் ரூபாய்க்கதிகப்படாமல் அபராததண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்; மேலும், அப்படிப்பட்ட எற்றிறக்குமதிக்கான செய்கரை - மேட்டுவழி - சமுத்திரவாராவதி - கப்பல் கட்டுமிடம் அல்லது வேறே கட்டுவேலையை எடுத்துவிடச்சொல்லி அவருக்கு நோடிஸ் கொடுத்தபின்பு, அதை அவர் அப்படியே இருக்கவொட்டுகிறவரையில் தினம் ஒன்றுக்கு நூறுரூபாய்கு அதிகப்படாமல் பின்னும் அபராத தண்டனையும் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

(2) ரேவின் எல்லைக்குள்ளிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு எற்றிறக்குமதிக்கான செய்கரை - மேட்டுவழி - சமுத்திரவாராவதி - கப்பல் கட்டுமிடம் அலலது வேறே கட்டுவேலையை போர்டார் அப்புறப்படுத்தலாம்; அதை அப்புறப்படுத்துவதற்காக போர்டாருக்குப் பிடிக்கும் சகல செலவுகளையும் அதை எவர் உண்டுபண்ணினாரோ எற்படுத்தினாரோ அல்லது நிலைநிறுத்தினாரோ அவர் செலுத்துவதற்குள்ளாவார். போர்டார் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்த செலவுத் தொகையானது - யாதொரு மாஜிஸ்ட்ரேட்டால் விதிக்கப்பட்ட அபராதமாயிருந்தால் எப்படியோ அப்படியே அந்த மாஜிஸ்ட்ரேட்டின் வாரன்டைக்கொண்டு வசூலிக்கப்படத்தக்கதாகும்.

சரக்குகளின் அளவையாவது எடையையாவது குறைத்துச் சொன்னாலும் அவைகளைப் பிசகாய் விவரித்துச் சொன்னாலும் தண்டனை.

111. போர்டாருடைய ஸ்வாதீனத்திலிருக்கிற யாதொரு எற்றிறக்குமதிக்கான செய்கரை - டாக் அல்லது சமுத்திரவாராவதியில் சரக்குகள் இறக்குமதி செய்யப்படும்போதாவது அதிலிருந்து எற்றுமதிசெய்யப்படும்போதாவது, மேற்படி சரக்குகளின் விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க வீதவரிகளை போர்டாருடைய யாதொரு உத்தியோகஸ்தர் நிர்ணயிக்கக்கூடியவராயிருக்கும்பொருட்டு அவரிடத்தில் கொடுக்கப்பட்ட யாதொரு தஸ்தவேஜில் மேற்படி சரக்குகளின் எடையாவது அளவாவது விவரமாவது குறைத்துக் காட்டப்பட்டிருப்பதாக அல்லது பிசகாய்க் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தால், அந்த சரக்குகளின் சொந்தக்காரர் - அந்தப்படி குறைத்துக்காட்டப்பட்ட அல்லது பிசகாய் விவரிக்கப்பட்ட சரக்குகள் அடங்கிய ஒப்படையின் முழு எடையின்மேலாகிலும் அளவின்மேலாகிலும் நியாயமாய் விதிக்கப்படவேண்டிய வீதவரிகளுக்கு இரண்டத்தனைக் கதிகப்படாமல் போர்டாரால் நிர்ணயிக்கப்படும ஒரு தொகையை அவர்களுக்குச் செலுத்துவதற்குள்ளாவார்; மேலும், போர்டார் விண்ணப்பம் பண்ணிக்கொள்ளுவதன்மேல், மேற்படி தொகையானது - யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையாயிருந்தாற்போல, அந்த மாஜிஸ்ட்ரேட்டின் வாரன்டைக் கொண்டு வசூல்செய்யப்படத்தக்கதாகும்.

வீதவரி முதலியவற்றைக் கொடாமல் தப்பித்துக் கொண்டால் தண்டனை.

112. யாதொரு மரக்கலம் அல்லது சரக்கின்விஷயமாய் போர்டாருக்குச் சட்டப்படி சேரவேண்டிய வீதவரிகளைச் செலுத்தாமல் தப்பித்துக்கொண்டு போகவேண்டுமென்கிற எண்ணத்தோடு எவராவது அப்படிப்பட்டதை அப்புறப்படுத்தினாலும், அப்புறப்படுத்த எத்தனப்பட்டாலும், அப்புறப்படுத்துவதற்கு உடந்தையாயிருந்தாலும், அவர் ஐம்பது ரூபாய்க்கதிகப்படாமல் அபராததண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

போர்டாருடைய சொத்துக்கு உண்டாக்கப்படுகிற நஷ்டத்தின் பெறுமானத்தை வரப்பற்றுவது.

113. யாதொரு மரக்கலத்தைச் செலுத்துகிறவராகவாவது அதைத் தம் அதிகாரத்திலுடையவராகவாவதிருக்கிற யாதொரு நபரின் அஜாக்கிரதையினாலாகிலும், அப்படிப்பட்ட மரக்கலத்திலே வேலையில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிற கப்பற்காரர்கள் அல்லது நபர்களில் யாருடைய அஜாக்கிரதையினாலாகிலும், போர்டாருடைய ஸ்வாதீனத்திலிருக்கிற யாதொரு எற்றிறக்குமதிக்கான செய்கரை - டாக்-சமுத்திரவாராவதி அல்லது வேறே கட்டு வேலைக்கு நஷ்டம் உண்டாக்கப்பட்டால், போர்டார் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல் அந்த நஷ்டத்தொகையானது -

அப்படிப்பட்ட மரக்கலத்தைச் சேர்ந்த படகுகள் - பாய்மரங்கள் - ஸ்பார்ஸுகள் - கயிறுகள் - கேபில்கள் - நங்கூரங்கள் அல்லது சாமான்களில் போதுமான பாகத்தை யாதொரு மாஜிஸ்ட்ரேட்டின் வாரன்டைக்கொண்டு ஜப்திசெய்து விற்பனைபண்ணி, மேற்படி நஷ்டத் தொகையை வசூல்செய்வதற்குண்டான செலவுத்தொகை சகிதமாய் வசூல்செய்யப்படத் தக்கதாகும்: ஆனால், அப்படிப்பட்ட மரக்கலத்தின் மாஸ்டர் தமக்குமுன் ஹாஜராகும்படி அவருக்கு ஸம்மன் அனுப்பியாகிறவரையிலாவது, அவர் ஹாஜராகிறபட்சத்தில் அவரை விசாரணை செய்தாகிறவரையிலாவது அப்படிப்பட்ட வாரன்டை எந்த மாஜிஸ்ட்ரேட்டும் பிறப்பிக்கக்கூடாது; மேலும், உண்டாக்கப்பட்ட சேதமானது, போர்டாரிடத்திலிருந்து கிரமமாய் அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகஸ்தருடைய அல்லது ரேவைச்சேர்ந்த பைலட் ஊழியத்தில் அமர்ந்திருக்கும் ஆபிஸருடைய உத்தரவினாலாகிலும் செய்கையினாலாகிலும் அவர் செய்யவேண்டிய வொன்றை அநியாயமாய்ச் செய்யாமல் விட்டதனாலாகிலும் உண்டாயிருக்கக்கூடுமென்று எவ்விதத்திலும் சொல்லமுடியாதிருந்தாலன்றி மற்றப்படி, அந்தக்காலத்தில் ஷை மரக்கலமானது போர்டாரைச் சேர்ந்த அல்லது ரேவைச் சேர்ந்த மேலேகண்ட உத்தியோகஸ்தருடைய உத்தரவுக்கு உட்பட்டிருந்தால் அப்படிப்பட்ட வாரென்டைப் பிறப்பிக்கக்கூடாது.

ஆக்டுக்கு அல்லது சகாயச்சட்டங்களுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட குற்றங்களை விசாரணைசெய்வது.

114. வேறேவிதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, இந்த ஆக்டுக்காவது 101-வது பிரிவின்படி பிரசுரஞ் செய்யப்பட்ட யாதொரு சகாயச்சட்டத்துக்காவது விரோதமான எந்த குற்றத்தையும், யாதொரு முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் அல்லாத வேறே எந்த மாஜிஸ்ட்ரேட்டும் விசாரணை செய்யக்கூடாது.

## 13-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

இப்போதைய சட்டப்படி கஸ்டம் கலெக்டருக்குள்ள அதிகாரத்துக்கு பாதகமில்லை யென்பது.

115. அந்தந்தகாலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டப்படி கஸ்டம் தீர்வை பிரதான உத்தியோகஸ்தருக்குச் சங்கிரமித்திருக்கிற எந்த அதிகாரத்துக்கும் இந்த ஆக்டிலுள்ள தெதனாலும் பாதகம் உண்டாகமாட்டாது.

இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட காரியங்கள் விஷயமாய் நடத்தப்படும் நடவடிக்கைகளைப் பற்றிய வரையறை.

116. இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்திற்காக எந்த நபர்மேலாவது வியாஜ்ஜியம் அல்லது வேறே நடவடிக்கை நடத்துவதானால், வியாஜ்ஜிய மூலத்தைக் குறிப்பிட்டு அவருக்கு எழுத்துமூலமாய் நோடிஸ் கொடுத்தபிறகு ஒரு மாதகாலம் கழிகிற வரையிலாகிலும், அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைக்குரிய வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்ட தேதியிலிருந்து ஆறுமாத காலம் கழிகிற வரையிலாகிலும், ஷை வியாஜ்ஜியம் அல்லது வேறே நடவடிக்கையை நடத்தத் தொடங்கக்கூடாது.

1908-ம்௵த்து 15 வது ஆக்ட்.

உத்தியோகஸ்தர்களுடைய அல்லது ஊழியக்காரர்களுடைய காரியங்களுக்காக போர்டார் உத்தரவாதியாகமாட்டார்களென்பது.

117. (1) இந்த ஆக்டின்படியாவது, 1908-ம்௵த்திய இந்துதேசத்து ரேவுகளைக் குறித்த ஆக்டின்படி போர்டார் ரேவு கன்ஸர்வேடராக கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறபட்சத்திலே, ஷை இந்துதேசத்து ரேவுகளைக்குறித்த ஆக்டின்படியாவது நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராகிலும் அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தருடைய அதிகாரத்தின்படியோ அல்லது கட்டளையின்படியோ பிரவர்த்திக்கிற யாதொரு நபராகிலும் யாதொரு காரியத்தைச் செய்தாலும் செய்யத்தவறிப்போனாலும், அப்படிசெய்வது அல்லது செய்யத்தவறுவது போர்டாருடைய கட்டளையின்படி நடந்திருந்தாலன்றி மற்றப்படி அதற்காக ஷை போர்டார் உத்தரவாதியாகமாட்டார்கள்;

மேலும், போர்டாருக்குச் சொந்தமாயிருக்கிற கப்பல் கட்டுமிடங்கள், ஹாஸர்ஸ் என்னும் அமாறுகள் அல்லது வேறே வஸ்துக்களிலே எதிலாவது யாதொரு குறைவு இருப்பதனால் யாதொரு மரக்கலத்திற்குண்டாகும் எவ்வித நஷ்டத்திற்கும் போர்டார் உத்தரவாதிகளாகமாட்டார்கள்;

அன்றியும், போர்டாராவது மேற்படி உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களில் எவராவது - இந்த ஆக்டை அனுசரித்து நல்ல எண்ணத்துடன் தங்களால் செய்யப்பட்டாகிலும் செய்யும்படி உத்தரவு பண்ணப்பட்டாகிலுமுள்ள யாதொரு செய்கைக்காக நஷ்டம் கட்டிக்கொடுப்பதற்குள்ளாகமாட்டார்கள்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொலலியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, போர்டார் - போர்டாராலாவது அவர்களிடத்தில் வேலையாயிருக்கும் எவராலாவது செய்யப்பட்ட யாதொரு காரியத்துக்காகவாகிலும் தவறுதலுக்காகவாகிலும் உண்டாக்கப்பட்ட யாதொரு நஷ்டத்துக்காகவாகிலும் பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு யாதொரு நபருக்குப் பிரதிபலன் கொடுக்கும்படி தீர்மானிக்கலாம்.

118. (1) இந்த ஆக்டிற்கண்ட காரியங்களை நிறைவேற்றும் பொருட்டுப் பிரதேச கவர்ன்மென்டார் விதிகள் ஏற்படுத்தலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும், ஷை விதிகளில் அடியிற்கண்ட சகல விஷயங்களுக்குமாகவாவது அவைகளில் எதற்காகவாவது நிபந்தனை ஏற்படுத்தலாம்; அந்த விஷயங்கள் எவையென்றால்:—

(a) போர்டாரின் ட்ரஸ்டிகளாகத் தெரிந்தெடுக்கப்படவேண்டிய நபர்களின் யோக்கியதாம்சங்கள்;

(b) அக்கிராசனாதிபதிக்கும் உப அக்கிராசனாதிபதிக்கும் அவர்கள் ரஜாவின்மேல் வேலைக்கு வராமலிருக்கும்போது அவர்களுக்கு பதிலாய் வேலை பார்க்கும்படியாக நியமிக்கப்படும் நபர்களுக்கும் கொடுக்கவேண்டிய சமபளமும் வர்த்தனைகளும்; என்ன திட்டங்களின்படியும் என்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அவை செலுத்தப்பட வேண்டுமோ அந்த திட்டங்களும் நிர்ப்பந்தங்களும்;

(c) அக்கிராசனாதிபதியும் உப அக்கிராசனாதிபதியும் போர்டைச் சேர்ந்த இதர ட்ரஸ்டிகளும் சபைகளில் ஹாஜராயிருப்பதற்காக அவர்களுக்குச் செலுத்தப்படத்தக்க கட்டணங்களும், என்ன திட்டங்களின்படியும் என்ன நிர்ப்பந்தங்களுக்குட்பட்டும் அந்தக் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமோ அந்த திட்டங்களும் நிர்ப்பந்தங்களும்;

(d) 19-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட விவாதங்களைப்பற்றி விசாரிப்பதும் அவைகளைத் தீர்மானிப்பதும்;

(e) 39-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a), (b) அடையாளமிட்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்ட ஊழியங்களில் எதையாகிலும் எந்த திட்டங்களுக்குட்பட்டு போர்டார் செய்யாமல் விட்டுவிடலாமோ, அல்லது 40-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி போர்டாருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொறுப்பைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ ஏற்றுக்கொண்டு எந்த திட்டங்களுக்குட்பட்டு போர்டார் யாதொரு ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளலாமோ அந்த திட்டங்கள்;

(f) போர்டார் 39-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கவேண்டிய, அல்லது யாரிடத்தில் எந்த ஊழியங்களாவது விட்டுவிடப்பட்டிருக்கின்றனவோ அந்த நபர் 42-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உடபிரிவின்படி கொடுக்கவேண்டிய ரசீது நமூனா;

(g) வரவு செலவுகளைக் குறிப்பிட்டு 87-வது பிரிவின்படி போர்டாருக்குமுன் வைக்கவேண்டிய வருஷாந்த எஸ்டிமேட் என்னும் மதிப்புக் கணக்குகளின் நமூனா.

(3) இந்த பிரிவின்படி விதிகள் ஏற்படுத்துவதற்கான அதிகாரமானது அடியிற்கண்ட திட்டங்களுக்குட்பட்டதாகும்:—

(a) ஷை விதிகளின் மசோதா சென்னை போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் பிரசுரிக்க வேண்டும்;

(b) மேலே கண்டபடி பிரசுரிக்கப்பட்ட பிறகு ஒரு மாதமாகிறவரையில் அந்த மசோதா விஷயமாய் மேல் நடவடிக்கை எதுவும் நடத்தக்கூடாது;

(c) இந்தப்பிரிவின்படி ஏற்படுத்தப்படும் சகல விதிகளையும் போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்டிலும் திருநெல்வேலி ஜில்லா கெஜெட்டிலும் பிரசுரிக்கவேண்டும்; மேலும், அவை அந்தப்படி பிரசுரிக்கப்படுவதன்மேல், இந்த ஆக்டில் நிரூபணம் செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

*பிரதேச கவர்ன்மென்டாருக்கு ரிடர்ன் என்னும் விவரக் கணக்குகள் அனுப்புவதும் சங்கதி தெரிவிப்பதும்.*

119. இந்த ஆக்டின் காரியங்களுக்காகப் பிரதேச கவர்ன்மென்டார் கேட்கக்கூடிய ரிடர்ன் என்னும் விவரக்கணக்குகளையும் சங்கதியையும் அக்கிராசனாதிபதி அனுப்பவேண்டும்.

*வேலைகளைத் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு போர்டாருடைய அதிகாரங்களை ரத்துபண்ணப் பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.*

120. இந்த ஆக்டின்படி போர்டார் செய்யவேண்டியவைகளென்று உத்தேசிக்கப்பட்ட வேலைகளை போர்டார் சரியாய்ச்செய்து முடிக்கவில்லை அல்லது பாதுகாக்கவில்லையென்றும் அப்படி செய்து முடிப்பார்கள்போல் அல்லது பாதுகாப்பார்கள் போல் இல்லையென்றும் பிரதேச கவர்ன்மென்டாருக்கு எப்போதாகிலும் தோற்றுகிறபட்சத்தில், அவர்கள் (பிரதேச கவர்ன்மென்டார்) - மேற்படி வேலைகளைச் செய்துமுடிப்பதற்காகிலும் பாதுகாப்பதற்காகிலும் தங்களுக்கு (பிரதேச கவர்ன்மென்டாருக்கு)த் திருப்தியாகும்படி போர்டார் வேண்டிய ஏற்பாடுகளை ஆறு மாசத்திற்குள்ளாகச் செய்யாவிட்டால், இந்த ஆக்டினால் போர்டாருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மேற்கண்ட காலமுடிவில் வாபஸ்வாங்கிக்கொள்ளப்படும் அல்லது ரத்து செய்து விடப்படுமென்று போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் விளம்பரஞ் செய்யப்படும் உத்தரவைக்கொண்டு ஆறுமாசத்திய நோடிஸ் கொடுக்கலாம். அந்தக்கால முடிவில் போர்டார்அப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்யாதிருந்தால், பிரதேச கவர்ன்மென்டார் முன்னமேயே ஏற்படுத்தப்பட்டிருக்கிற வேலைகளைத் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொண்டு நிர்வாகம் செய்துவருவதுமல்லாமல், அவ்வித விளம்பரமூலமாகவே போர்டாருடைய அதிகாரங்

கள் வாபஸ்வாங்கிக்கொள்ளப்பட்டன அல்லது ரத்தாய்விட்டனவென்றும் நிர்ணயிக்கலாம்; அப்படிப்பட்ட விளம்பரம் பிரசுரஞ்செய்யப்படுவதன்மேல், அந்த காலத்திலே போர்டார் பரமாயிருக்கும் சகல அசையாப்பொருள்களும் அசையும்பொருள்களும், வீதவரிகளையும் தண்டத்தொகைகளையும் விதிப்பதற்கும் வசூல்செய்வதற்குமுண்டாயிருக்கிற சகலசுதந்தரங்களும், ஒப்பந்தங்களினாலுண்டாகும் சகல பிரயோசனமும், வியாஜ்ஜியம்தொடர ஏற்பட்டிருக்கும் சகல சுதந்தரங்களும், ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு ட்ரான்ஸ்பராகி அவர்கள் பரமாக வேண்டும்; இந்த ஆக்டின்படி போர்டாருக்குக்கடன் கொடுத்தவர்களாகிய சகலமானவர்களுடைய சுதந்தரங்களும் - ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு மேற்கண்டபடி ட்ரான்ஸ்பராகி அவர்கள் பரமாயிருக்கிற சொத்து அளவுக்கு ஷை ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களைக் கட்டுப்படுத்தத் தக்கவைகளாய் இருந்துகொண்டிருக்கவேண்டும்.

## 1-வது ஷெட்யூல்.

(28 - வது பிரிவைப் பார்க்கவும்.)

போர்டார் பரமாயிருக்கும் சொத்துக்கள்.

1. கஸ்டம் இலாகாவைச் சேர்ந்த மேலே மூடியிருக்கும் சரக்கு கொட்டகையும் தீப் பற்றி எரியும் வஸ்துக்கள் வைக்கும் கொட்டகையும் பிரயாணிகளின் பயணச்சாமான் வைக்கும் கொட்டகையும், போர்ட் ஹெல்த் டிபார்ட்மெண்ட் என்னும் ரேவு சுகாதார இலாகாவைச் சேர்ந்த ப்ளேக் என்னும் மஹாமாரி சம்பந்தத்தை நீக்குவதற்கான கொட்டகையும் நீங்கலாக, தெற்கே இம்பீரியல் பாங்க் ஆவ் இந்தியா என்னும் பாங்கியின் கட்டிடங்களுக்கும் வடக்கே மெஸ்ஸர்ஸ் ராலி ப்ரதர்ஸ் என்னும் கம்பெனியாரின் கட்டிடங்களுக்கு எதிரிலுள்ள கடற்கரைக்கும் இடையில் வேலி போட்டு அடைப்பு அடைத்திருக்கும் நிலத்துண்டு அல்லது நிலத்தின் பாகம் முழுவதும், அதன் மேலுள்ள கட்டிடங்கள் - கட்டுக்கோப்புகள் - உபகரணங்கள் ஆகிய இவைகளும்.

2. 128·43 ஏகரா விஸ்தீரணமுள்ள தூத்துக்குடி கிராமத்தைச் சேர்ந்த 392-2, 392-3-வது ரீஸர்வே நம்பர்கள்.

3. 105·59 ஏகரா விஸ்தீரணமுள்ள தூத்துக்குடி கிராமத்தைச் சேர்ந்த ரீஸர்வே நெ. 394.

4. 949·26 ஏகரா விஸ்தீரணமுள்ள 347 முதல் 369 வரையிலுள்ள ரீஸர்வே நம்பர்களும் 790-வது ரீஸர்வே நம்பரும்.

5. 0·30 ஏகரா விஸ்தீரணமுள்ள தூத்துக்குடி கிராமத்தைச் சேர்ந்த பழைய ஸர்வே நெ. 393.

6. முளக்காடு கிராமத்தைச் சேர்ந்த 349, 350, 354, 355, 790, 369-வது ரீஸர்வே நம்பர்களுக்கும் சமுத்திரத்துக்கும் இடையில் ஸர்வே செய்யப்பட்டும் சகதியாயுமுள்ள சகல நிலங்களும்.

7. பிரயாணிகள் தங்குவதற்கான பங்களாவுக்குத் தெற்கிலும், குத்தாலிங்கம் செட்டியாருடைய உப்பளத்துக்குக் கிழக்கிலும், உப்பர் ஓடை முகத்துக்கு வடக்கிலும் ஸர்வே செய்யப்படாமலும் சகதியாயுமுள்ள நிலம் முழுவதும்.

8. உப்பர் ஓடைக்குத் தெற்கிலும் மிலவித்தான் கிராமத்துக்குக் கிழக்கிலும் ஸர்வே செய்யப்படாமலும் சகதியாயுமுள்ள நிலம் முழுவதும்.

---

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

தூத்துக்குடி ரேவில் மிகப் பெரிய சீர்திருத்தங்கள் செய்யவும் அந்த ரேவை விருத்தி பண்ணவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பிரதேச கவர்ன்மெண்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு ஷை ரேவைப் பரிபாலிக்கும்பொருட்டு ட்ரஸ்டிகள் அடங்கிய போர்ட் என்னும் சபையொன்றை ஏற்படுத்துவதற்காக இந்த மசோதா ஆக்டில் நிபந்தனை கண்டிருக்கிறது.

1923-ம்௵ நவம்பர்௴ 14௳. வி. ஜி. டாடன்டர்.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
வா (சட்ட நிரூபண) இலாகா,

(A true translation)

C. N. SARAVANA MUDALIAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.